218

218

சேக்கிழார்

இலக்கணமும் கட்டுரையும்

(மூன்றாம் புத்தகம்—ஐந்தாம் வகுப்பு)

(1939-ம் வருடத்தின் பாடத்திட்டப்படி தயாரிக்கப்பட்டது.)

7-AUG 1945
MADRAS

ஆசிரியர்:

வித்வான் மா. இராசமாணிக்கம், B. O. L., L. T.,

தமிழ் ஆசிரியர்,

முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப்பள்ளி, சென்னை.

910
3 4 5

மாடல் பப்ளிகேஷன்ஸ்,

5, பத்ரையன் தெரு, சென்னை.

பதிப்புரிமை] 1945 [விலை அணா 6

சேக்கிழார்

இலக்கணமும் கட்டுரையும்

(மூன்றும் புத்தகம்—ஐந்தாம் வகுப்பு)

(*1939-ம் வருடத்தின் பாடத்திட்டப்படி தயாரிக்கப்பட்டது*)

494.8115

ஆசிரியர் :

வித்வான் மா. இராசமாணிக்கம், B. O. L., L. T

தமிழ் ஆசிரியர்

முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப்பள்ளி, சென்னை.

910

மாடல் பப்ளிகேஷன்ஸ்,

பத்ரையன் தெரு, சென்னை.

பதிப்புரிமை] *1945* [விலை அணா 6

First Edition — Nov. 1942
Reprint — July, 1944
Reprint — July, 1945

Commercial Printing & Publishing House, G.T., Madras.

முன்னுரை

'சேக்கிழார் இலக்கணமும் கட்டுரையும்' என்னும் பெயர் கொண்ட இம்மூன்றும் நூல் ஐந்தாம் வகுப்பு மாணவர்க் கென்று எழுதப்பட்டது. இஃது கல்வித் துறையினர் 1939-ல் வெளியிட்ட பாட இயல் (Syllabus) படி அமைந் திருப்பது.

இலக்கணம்: பேச்சிலும் எழுத்திலும் பிழை வராமல் இருத்தற்குரிய அளவில் இலக்கணப் பயிற்சி பெறுதல், நிறுத்தக் குறிகளைப்பற்றிய அறிவு பெறுதல்—இவையே பாட இயலிற் கண்டவை. இக்குறிப்பை அடிப்படை யாகக் கொண்டே இங்கு இலக்கண விளக்கம் தரப்பட் டுள்ளது. இதன்கண் காணப்படும் பல செய்திகள் வேறு இலக்கண நூல்களில் இதுவரை வெளிப்பட வாரா தவை ஆகும்.

கட்டுரை: (1) பொதுத்தன்மையும் காரியமும் அமைந்த நீண்ட கடிதங்களை எழுதப்பழகுதல், (2) வருடத் தின் பிற்பாதியில் - தக்க அமைப்புடன் (குறிப்புகளுடன்) அறிந்த செய்திகளைக் கட்டுரையாக எழுதப்பழகுதல்-என் பனவே பாட இயலிற் கண்டவை.

இந்நூலுள் (1) பொதுத்தன்மை வாய்ந்த கடிதங்கள் ஐந்தும், காரியக் கடிதங்கள் ஐந்தும் மாதிரியாகத் தரப் பட்டுள. (2) தக்க குறிப்புகளுடன் 12 கட்டுரைகள் மாதிரியாகத் தரப்பட்டுள்ளன.

சுருங்கக் கூறின், இச்சிறு நூல் வரிசை (மூன்று நூல்களும்) இளம் பிள்ளைகட்கு நல்ல தமிழ்ப் பயிற்சியைத் திறம்பட அளிக்கவல்லது என்று கூறுதல் மிகையாகாது. இந்நூல்களின் அமைப்பு முறையை நன்கு கவனித்து, இவற்றை ஆதரித்தல் கற்றறிந்த மாந்தர் கடன்.

முத்தியாலுப்பேட்டை
உயர்கலைக்கழகம்,
சென்னை.

மா. இராசமாணிக்கம்.

பொருளடக்கம்

எண்	பொருள்			பக்கம்

இலக்கணம்

1.	எழுத்து	...	...	1
2.	சொல்	...	...	6
3.	வாக்கியம்	...	...	19
4.	பொது	...	...	29
5.	தேர்வு வினாக்கள்	...	...	36

கட்டுரை

I. கடிதங்கள் :—அழைப்பு — வாழ்த்து — ஆறுதல்—இடச்சிறப்பு—என் ஒரு நாள் வேலைகள் — இலவசப் படிப்புக்கு மனு—துண்டு விளம்பரம்—மாணவர் தமிழ்ச் சங்க ஆண்டு விழா அழைப்பு—போலீசாருக்குக் கடிதம்—நகர சபைக்கு விண்ணப்பம்—பயிற்சி ... 43 - 54

II. கட்டுரை :—

1.	பசு	...	...	55
2.	வாழை மரம்	...	...	56
3.	காகம்	...	...	58
4.	எங்கள் கிராமம்	...	...	59
5.	எங்கள் பள்ளிக்கூடத் தோட்டம்		...	61
6.	தெரு நிகழ்ச்சி	...	...	63
7.	நான் கண்ட திருவிழா		...	65
8.	ஆறு	...	...	67
9.	நாங்கள் பார்த்த பாடசாலை		...	69
10.	பொங்கல் பண்டகை	...	...	71
11.	நான் பார்த்த ஊர்	...	...	72
12.	எங்கள் தமிழ்ச் சங்கம்	...	...	74

பிள்ளைகளுக்கு :

கட்டுரை எழுதும் முறை

1. பிள்ளைகளே, உங்கள் நோட்டுப் புத்தகத்தை எதிர் எதிர்ப் பக்கங்களாகத் திறந்து கொண்டு வலப்பக்கத்தின் இடப்புறம் ஓர் அங்குல அளவில் குறுக்குக் கோடு (Margin) போடுங்கள். வலப்புறப் பக்கத்தில் நேர்-பாதியில் குறுக்குக் கோடு போடுங்கள். இவ்விரண்டு கோடுகட்கும் இடைப்பட்ட இடத்திற்றான் கட்டுரை எழுத வேண்டும். அதனை எழுதுமுன் இடப்பக்க ஓரமுள்ள முதல் வரிமீது பயிற்சி எண், எழுதும் தேதி ஆகிய இரண்டையும் குறித்தல் வேண்டும். வலப் பக்கத்துப் பிற்பாதி முதல் வரியில் திருத்தம் என்பதை எழுதுக, அஃது ஆசிரியர் சுட்டும் பிழைகளைத் திருத்தும் இடமாகும்.

2. வலப்பக்கக் கோட்டுக்கு அருகில் ஒரு சொல் பிரிய நேர்ந்தால், சிறு கோடு போட்டு, அடுத்த வரி முதல் எழுதிச் செல்லலாம்.

3. இடப்பக்கக் கோட்டின் முதலில் (வரியின் தொடக்கத்தில்) மெய் எழுத்து வரும்படி எழுதலாகாது.

4. பாரா (Para) என்பது குறித்த ஒரு பொருளைப் பற்றியே வரும் சில வாக்கியங்களின் தொடர்பு ஆகும். இதனைப் 'பிரிவு' என்றுங் கூறலாம்.

5. கட்டுரைக்கு வேண்டும் குறிப்புகளை முதலில் தயார் செய்து கொள்ளவேண்டும்; ஒவ்வொரு குறிப்பையும் விளக்கி ஒரு பாராவே எழுதவேண்டும்.

கட்டுரை

பயிற்சி 1 15—7—'43	உண்மை

குறிப்புகள் :—

1. உண்மை யாது?
2. உண்மையுடைமை--உதாரணம்
3. பொய்யால் விளைந்த தீமை
4. முடிவு

கட்

கொண்டு

எழுதும் முறை

உடைமை	திருத்தம்
டுரை போய்க்-	1. அறங்களைச் செய்தற்கு அறங்களைச் செய்தற்கு அறங்களைச் செய்தற்கு 2. கணவன் கணவன் கணவன்

6. கட்டுரை எழுதும்பொழுது சொல்லுக்குச் சொல் இடம் விட்டு எழுத்துகளை ஒழுங்காக எழுதுதல்வேண்டும்.

7. பாராவில் உள்ள ஒவ்வொரு வாக்கியத்திற்கும் எழுவாய் அமைத்தே எழுதவேண்டும். ஒன்றைப் பற்றியே பல வாக்கியங்கள் எழுத நேரின், அடுத்துவரும் வாக்கியங்களில் எழுவாய் குறியாமல் முடிவில் (;) செமிக் கோலன் இடுதல் நல்லது.

8. எழுதி முடிந்த பிறகு கட்டுரையை நான்கு முறை படித்துப் பார்க்க வேண்டும். (1) முதல் முறை எழுதிய விஷயத்தையும், (2) இரண்டாம் முறை பாராக்களின் அமைப்பையும், (3) மூன்றும் முறை வாக்கிய அமைப்பை யும், (4) நான்காம் முறை எழுத்து-இலக்கணப் பிழைகளை யும் கவனித்துத் திருத்துதல் வேண்டும்.

9. ஆசிரியர் திருத்திய சந்திப் பிழைகளையும் எழுத் துப் பிழைகளையும் 'கட்டுரை எழுதும் முறை'யில் காட் டியபடி திருத்துதல் வேண்டும்; திருத்திப் பிழையை உணர்ந்த தற்கு அடையாளமாக, அந்த எழுத்துத் திருத் தத்தின் அடியில் கோடிட்டுக் காட்டுதல் வேண்டும்.

10. வாக்கியப் பிழை முதலியவற்றை ஆசிரியரைக் கேட்டு முறைப்படி திருத்திக் கொள்க.

இலக்கணம்

சேக்கிழார்

இலக்கணமும் கட்டுரையும்

I. எழுத்து

தமிழ் எழுத்துகள் மொத்தம் 247 ஆகும். அவை, (1) உயிர் எழுத்து (2) மெய் எழுத்து (3) உயிர மெய் எழுத்து, (4) ஆய்த எழுத்து என நான்கு வகைப்படும்.

உயிர் எழுத்துகள்—12 : இவை அ. ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ என்பன. இவை மெய் எழுத்துகளின் உதவி இல்லாமல் (மெய்யின் - உடலின் உதவி இல்லாமல் தானாக இயங்கும் உயிர் போல) தாமாகவே ஒலிக்க வல்லவை. ஆதலால் இவை உயிர் எழுத்துகள் எனப்பட்டன

மெய் எழுத்துகள்—18 : இவை க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன் என்பன. இவை (உயிரின் உதவி இன்றி இயங்க முடியாத நமது மெய்போல) உயிர் எழுத்துகளின் உதவி இன்றி ஒலிக்காதவை. ஆதலால் இவை மெய் எழுத்துகள் எனப்பட்டன.

உயிர் மெய் எழுத்துகள்—216 : க் + அ = க இவ்வாறு மெய்யெழுத்தும் உயிர் எழுத்தும் கூடுவதால் உண்டாகும் புதிய எழுத்துகளே உயிர் மெய் எழுத்துகள். 18 மெய்யோடும் 12 உயிரும் தனித்தனிக் கூடுவதால் (18 × 12) 216 உயிர் மெய் எழுத்துகள் உண்டாகின்றன.

ஆய்த எழுத்து :—1 : ஃ இது மூன்று புள்ளி வடிவினை உடையது. இது, அஃது, இஃது என்பது போலச் சொல்லின் நடுவில் வருவது.

ர—ற வேறுபாடு

இந்த இரண்டில் முன்னதை மென்மையாகவும் பின்னதை வன்மையாகவும் உச்சரிக்க வேண்டும். இவற்றின் பொருள் வேறுபாடு உணராமல் ஒன்றுக்குப் பதிலாக மற்றொன்றை எழுதுதல் தவறு ஆகும். சில உதாரணங்களைக் கீழே காண்க:

ர	ற
அரம் - ஓர் ஆயுதம்	அறம் - தருமம்
அரண்மனை - அரசன் வீடு	அறமனை - தருமசாலை
அரி - (காயை) அரி	அறி - தெரிந்துகொள்
இரங்கு - இரக்கப்படு	இறங்கு - கீழ் இறங்கு
இரத்தல் - பிச்சை எடுத்தல்	இறத்தல் - சாதல்
இரை - உணவு, ஒலி	இறை - வரி, தலைவன்
உரவு - வலிமை	உறவு - சொந்தம்
உரி - பட்டை	உறி-பண்டம் வைக்கும் தூக்கு
எரி - தீ	எறி - வீசு

ர	ற
கரை - ஓரம்	கறை - அழுக்கு
கரையான் - கரையில் இருப்பவன்	கறையான் - செல்
கிரி - ஓர் உயிர்	கிறி - கிழித்து
குரவர் - பெரியோர்	குறவர் - ஒரு சாதியார்
குரை - ஒலி	குறை - குறைவு
கூரிய - கூர்மையான	கூறிய - சொன்ன
கூரை - வீட்டுக் கூரை	கூறை - புடவை
சிரை - தலையைச் சிரை	சிறை - காவல்
சொரி - பொழி	சொறி - ஒருவகை நோய்
துரை - தலைவன்	துறை - வழி
மரு - வாசனை	மறு - குற்றம்
மாரி - மழை	மாறி - மாறுபட்டு
விரகு - தந்திரம்	விறகு - கட்டை
விரல் - கைவிரல்	விறல் - வலிமை

ல-ழ-ள வேறுபாடு

பலம் - பழம் - பளபள - இவற்றை உச்சரித்து ஓசை வேறுபாடு அறிக. ஒன்றுக்குப் பதிலாக மற்றொன்றை எழுதித் தவறு செய்யலாகாது. சில உதாரணங்களைக் கீழே காண்க;

1.	2.
கல் - கள்	கலம் - களம்
பல் - பள்	குலம் - குளம்
மல்லன் - மள்ளன்	கல்வி - கேள்வி
பல்லன் - பள்ளன்	குரல் - குறள்
தோல் - தோள்	மலை - மழை

3. வலி - நோவு, வலிமை
வழி - பாதை
வளி - காற்று

4. தவலை - பாத்திரம்
தவளை - ஓர் உயிர்
பல்லி - ஓர் உயிர்
பள்ளி - படுக்கை

5. தலை - தலை
தழை - இலை
தளை - கட்டு, விலங்கு

6. வாலை - சிறு பெண்
வாழை - ஒருவகை மரம்
வாளை - ஒருவகை மீன்

ந - ன - ண வேறுபாடு

கந்தன், கன்று, கண்டம் - இவற்றை உச்சரித்து ஓசை வேறுபாடு உணரவேண்டும்; பொருள் வேறுபாடும் உண்டு. ஒன்றுக்குப் பதிலாக மற்றொன்றை எழுதித் தவறு செய்யலாகாது. சில உதாரணங்களைக் கீழே காண்க:

1. ஆனை - யானை
ஆணை - சத்தியம், கட்டளை

5. தினை - ஒருவகைத் தானியம்
திணை - குலம்

2. என் - என்னுடைய
எண் - எண்ணிக்கை

6. மனம் - மனம்
மணம் - வாசனை

3. தன் - தன்னுடைய
தண் - குளிர்ச்சி
(தண் + நீர் = தண்ணீர்)

7. மனை - வீடு
மணை - பலகை

4. பனி - பனி, குளிர்ச்சி
பணி - வேலை, கட்டளை

8. முன்னாள் - முன் நாள்
முந்நாள் - மூன்று நாள்

சுட்டு எழுத்துகள்:—3. அ, இ, உ, என்னும் உயிர் எழுத்துகள் மூன்றும் ஒரு பொருளைச் சுட்

டிக் காட்ட உதவுகையில் சுட்டு எழுத்துகள் எனப் படும். அவன், அவ்வீடு, இவள், இப்பெண், உவர், உவ்வீடு.

வினு எழுத்துகள்—5 : எ, ஏ, ஆ, ஓ, யா என்னும் ஐந்தும் வினுப் பொருளேத் தருகையில் வினு எழுத் துகள் எனப்படும்.

எது? ஏது? யார்? அவனு? அதுவோ?

பயிற்சி

1. தமிழ் எழுத்துகள் எத்தனே வகைப்படும்? என் னென்ன?

2. 'உயிர் எழுத்து, மெய் எழுத்து' எனக் காரணம் என்ன?

3. 'உயிர்மெய் எழுத்து'—எதற்கு—ஏன் இப்பெயர் வந்தது?

4. சுட்டு, வினு எழுத்துகள் எவை? உதாரணத்தில் அமைத்துக் காட்டு.

5. அப்பம், அவன், இடம், இது, எது, ஏப்பம், யானே, யாது, அவனு, அணு, எவன், எடை.—இவற்றில் உள்ள சுட்டு வினு எழுத்துகளேக் கூறு.

6. ர—ற, ந—ன—ண, ல—ழ—ள ; இவற்றை வேறுபாடு தோன்ற உச்சரித்துக் காட்டு.

7. இவற்றைச் சொற்களில் அமைத்து உச்சரித்துக் காட்டு,

8. பிழைகளேத் திருத்து :—

1. அரசன் அரம் செய்தான், கொல்லன் அறம் செய்தான்.

2. நீ பள்ளத்தில் இரங்கு ; ஏழையைக் கண்டு இறங்கு.

3, குரவர் கூடை பின்னுவர் ; இவர் எம் குறவா,

4, அடுப்பில் விரகு வை; அவன் விறகு செய்தான்.

II. சொல்

ஓர் எழுத்துத் தனித்தாவது இரண்டு முதலிய எழுத்துகள் ஒன்று சேர்ந்தாவது ஒரு பொருளைத் தெரிவிப்பது சொல் எனப்படும்.

அச் சொல், பெயர்ச் சொல், வினைச்சொல் என்று சிறப்பாக இரண்டு வகைப்படும்.

பெயர்ச் சொல்

ஒன்றன் பெயரே பெயர்ச் சொல். அது பொருள் பெயர், இடப் பெயர், காலப் பெயர், சினைப் பெயர், குணப் பெயர், தொழில் பெயர், எனப் பலவகைப் படும்.

1. பொருட் பெயர்—ஒரு பொருளின்பெயரைக் குறிப்பது.

கந்தன், கழுதை, மரம், பூனை, மலை.

2. இடப் பெயர்—இடத்தின் பெயரைக் குறிப் பது.

வீடு, கோவில், ஆறு, நாடு, தேசம்.

காலப் பெயர்—காலத்தின் பெயரைக் குறிப் பது.

காலை, பகல், நாள், ஆனி, ஆண்டு.

4. சினைப் பெயர்—உறுப்பின் பெயரைக் குறிப்பது.

கை, கிளை, வால், காம்பு, தலை.

5. **குணப் பெயர்** — குணத்தின் பெயரைக் குறிப்பது.

நன்மை, வெண்மை, இயல்பு, தீமை,

6. **தொழிற் பெயர்** — தொழிலின் பெயரைக் குறிப்பது.

வரவு, வருதல், வற்றல், பொங்கல்.

பெயர்ச் சொல் உணர்த்துவன

பெயர் சொல் **திணை, பால், எண், இடம், வேற்றுமை** என்பவற்றை உணர்த்தும்.

1. **திணை** என்பது **குலம்**. அஃது (1) உயர்திணை, (2) அஃறிணை என இருவகைப்படும்.

(1) மக்கள், தேவர் —உயர்திணை (உயர்ந்த குலம்)

(2) மற்றவை எல்லாம்—**அஃறிணை** (தாழ்ந்த குலம்)

2. **பால்** என்பது திணையின் உட்பிரிவு. உயர் திணையில் (1) **ஆண்பால்** (2) **பெண்பால்** (3) **பலர்பால்** என்றும், அஃறிணையில் (1) **ஒன்றன்பால்** (2) **பலவின் பால்** என்றும் ஐந்து பால்கள் உண்டு.

(1) அவன், முருகன்—ஆண்பால்		
(2) அவள், வள்ளி —பெண்பால்	உயர்திணை	
(3) அவர், வீரர் —பலர்பால்		
(1) அது, கழுதை, மலை—ஒன்றன்பால்	அஃறிணை	
(2) அவை, மலைகள் —பலவின்பால்		

ஆண்பால் - பெண்பால் பெயர்கள்

ஆண்பால்	பெண்பால்
அப்பன்	அம்மை
ஆசிரியன்	ஆசிரியை
இடையன்	இடைச்சி
உபாத்தியாயன்	உபாத்தியாயினி
உழவன்	உழத்தி
ஒருவன்	ஒருத்தி
கணவன்	மனைவி
சிறுவன்	சிறுமி
சீமான்	சீமாட்டி
செல்வன்	செல்வி
திருவாளன்	திருவாட்டி
பார்ப்பனன்	பார்ப்பனி
பிரான்	பிராட்டி
பொன்னன்	பொன்னி
மாணவன்	மாணவி

3. எண் என்பது பொருள்களின் எண்ணிக்கை ஆகும். அது ஒருமை, பன்மை என இரு வகைப்படும்.

அவன், அவள், அது —ஒருமை (Singular)

அவர், வீரர், அவை —பன்மை (Plural)

அஃதாவது,

(1) ஆண்பால், பெண்பால், ஒன்றன்பால் } —ஒருமை எண்

(2) பலர்பால், பலவின்பால் —பன்மை எண்

ஒருமை - பன்மைப் பெயர்கள்

வீடு—வீடுகள்	நூல்—நூற்கள்
தேனீ—தேனீக்கள்	பல்—பற்கள்
பூ—பூக்கள்	நாள்—நாட்கள்
தெரு—தெருக்கள்	தாய்—தாய்மார்
மரம்—மரங்கள்	குரு—குருமார்
பெரியது—பெரியவை	நண்பன்—நண்பர்
யாது—யாவை	தோழன்—தோழர்
அது—அவை	தான்—தாம்
எனக்கு—எமக்கு	உனக்கு—உமக்கு
எனது—எமது	தனது—தமது

4. இடம் என்பது பேசுவோனையும், கேட்போனையும், பேசப்படும் பொருளையும் குறிக்கும் இடம் ஆகும்.

பேசுவோன்—**தன்மை இடம்**, கேட்பவன்—**முன்னிலை இடம்**, பேசப்படும் பொருள்—**படர்க்கை இடம்** எனப்படும்.

நான் உன்னிடம் அவனைக் குறித்துப் பேசினேன்.
↓ ↓
தன்மை இடம்-முன்னிலை இடம்-படர்க்கை இடம்

(1) நான், யான், நாம், யாம் நாங்கள், யாங்கள் } —**தன்மை இடத்துப் பெயர்கள்**

(2) நீ, நீர், நீங்கள் —**முன்னிலை இடத்துப் பெயர்கள்**

(3) அவன், அவள், அவர், அது, அவை முதலியவும் எல்லாப் பெயர்களும்	—படர்க்கை இடத்துப் பெயர்கள்

5. **வேற்றுமை—இராமன்** வந்தான், **இராமனைக்** கண்டேன்—இவ்வாக்கியங்களில் வரும் 'இராமன்-இராமனை' என்பவற்றைக் கவனிக்கவும்: 'இராமன்' என்பது ஒருவன் பெயர். அதனுடன் **ஐ** சேர்வதால், 'இராமனை' (இராமன் + ஐ) என்பது உண்டாகிறது. 'இராமன்' என்பதற்கும் 'இராமனை' என்பதற்கும் **வேற்றுமை** (வேறுபாடு) இருக்கிறது அல்லவா?

இவ்வாறு பெயர்ச் சொல்லின் பொருள் வேறுபடுதலே **வேற்றுமை** எனப்படும். பொருளை வேறுபடுத்தும் உறுப்பு **வேற்றுமை உருபு** எனப்படும்.
வேற்றுமை எட்டு வகைப்படும்:—

(1) இராமன்	முதல் வேற்றுமை
(2) இராமனை (ஐ)	இரண்டாம் வேற்றுமை
(3) இராமனால் (ஆல்) இராமனோடு (ஒடு) இராமனுடன் (உடன்)	மூன்றாம் வேற்றுமை
(4) இராமனுக்கு (கு)	நான்காம் வேற்றுமை
(5) இராமனில் (இல்) மலையிலிருந்து (இருந்து)	ஐந்தாம் வேற்றுமை

(6)	இராமனது (அது) இராமனுடைய (உடைய)	ஆறாம் வேற்றுமை
(7)	பெட்டியி ல் (இல்) இராமனிடம் (இடம்)	ஏழாம் வேற்றுமை
(8)	இராமன்! இராம! இராமா! பிள்ளை—பிள்ளாய்! மக்கள்—மக்காள்! (அழைத்தல்)	எட்டாம் வேற்றுமை

பயிற்சி

1. சொல், பெயர்ச்சொல்—இவை யாவை?

2. காகம், கருமை, இரவு, சுண்டல், துதிக்கை, மிலாறு, ஆவணி, பள்ளிக்கூடம், கொட்டில், முருகன்—இவை என்னென்ன பெயர்கள்?

3. பெயர்ச்சொல்லில் அறிய வேண்டுவன யாவை?

4. திணை, பால், எண், இடம், வேற்றுமை—இவை யாவை?

5. கந்தன், கழுதை, மலைகள், வீரர், வள்ளி—இவை என்ன திணையின் பாற்படும்? ஒவ்வொன்றும் என்ன பால்? என்ன எண்?

6. மூன்று இடங்களையும் விளக்கு. மூன்று இடப் பெயர்கள் எவை?

7. முருகன்—இப்பெயர் இரண்டாம் வேற்றுமை முதல் எட்டாம் வேற்றுமை முடிய அடையும் மாறுதல்களை எழுது; வேற்றுமை உருபுகளையும் குறி.

8. அண்ணன், பிள்ளை, பையன், பெண்—இவற்றிற்கு எட்டாம் வேற்றுமைப் பெயர்களைச் சொல்.

வினைச் சொல்

முருகன் படித்தான் முருகன் படித்து (வந்தான்) படித்த முருகன்	இவற்றில் படித்தான், படித்து, படித்த என்னும் மூன்று சொற்களும் முருகன் செய்த வினையை (தொழிலை)யே குறித்தலால், **வினைச் சொற்கள்** எனப்படும்.

ஆயினும், **படித்தான்** என்பது ஒன்றே வினை முற்றி நிற்கிறது. மற்றவை இரண்டும் **எச்சமாக** (பொருள் முடியாமல்) இருக்கின்றன. இவற்றுள் (1) **படித்து** என்பது 'வந்தான்' என்பது போன்ற வேறு ஒரு வினைச் சொல்லைத் தழுவி நிற்கிறது. ஆதலால் இது **வினை எச்சம்** எனப்படும்; (2) **படித்த** என்பது 'முருகன்' என்னும் பெயர்ச் சொல்லைத் தழுவி நிற்கிறது. ஆதலால், இது **பெயர் எச்சம்** எனப்படும்.

வினை முற்று

வந்தான்
போனாள்
தடுத்தார்
எழுந்தது
சிரித்தன

வினை எச்சம்	பெயர் எச்சம்
வந்து, வர	வந்த, வருகின்ற, வரும்
போய். போக	போன, போகின்ற, போகும்
தடுத்து, தடுக்க	தடுத்த, தடுக்கின்ற, தடுக்கும்
எழுந்து, எழ	எழுந்த, எழுகின்ற, எழும்
சிரித்து, சிரிக்க	சிரித்த, சிரிக்கின்ற, சிரிக்கும்

இவ்வாறே பிற முற்று - எச்சங்களை அறிந்து கொள்க.

மூன்று காலங்கள்

(1) இராமன் நேற்று **வந்தான்**—இது நடந்த காலச் செயலை உணர்த்துகிறது.

(2) இராமன் இன்று **வருகிறான்**—இது நடக்கின்ற காலச் செயலை உணர்த்துகிறது.

(3) இராமன் நாளை **வருவான்**—இது நடக்கப் போகும் காலச் செயலை உணர்த்துகிறது.

இம்மூன்று காலங்களும் முறையே (1) இறந்த காலம் (2) நிகழ் காலம் (3) எதிர் காலம் எனப்படும்.

எனவே,

(1) வந்தான்—இறந்த கால வினைமுற்று ஆகும்.

(2) வருகிறான்—நிகழ்கால வினைமுற்று ஆகும்.

(3) வருவான்—எதிர்கால வினைமுற்று ஆகும்.

தன்வினை—பிறவினை

1. தன்வினை : இராமன் ஓடினன்.—இராமன் ஓடுதல் ஆகிய செயலைத் தானே செய்தான். ஆதலால், ஓடினன் என்பது தன்வினை எனப்படும்.

2. பிறவினை : இராமன் ஆடுகளை ஓட்டினன்.— இராமன் ஆடுகளை ஓடச் செய்தான். ஆதலால், ஓட்டினன் என்பது பிறவினை ஆகும்.

இத்தகைய தன்வினை—பிறவினைகளில் சிலவற்றைக் கீழே காண்க :

தன்வினை	பிறவினை	தன்வினை	பிறவினை
வா	வருவி	வந்தான்	வருவித்தான்
நட	நடத்து	தாழ்ந்தது	தாழ்த்தது
செய்	செய்வி	உண்டான்	உண்பித்தான்
படி	படிப்பி	தோன்றினள்	தோற்றினள்
தா	தருவி	கூடினர்	கூட்டினர்
எழு	எழுப்பு	உருண்டது	உருட்டியது
ஆடு	ஆட்டு	செய்தான்	செய்வித்தான்

ஐம்பால் வினைமுற்றுகள்

உயர்திணை

(1) இராமன் வந்தான் — ஆண்பால் வினைமுற்று
(2) சீதை வந்தாள் — பெண்பால் வினைமுற்று
(3) வீரர் வந்தனர் — பலர்பால் வினைமுற்று

அஃறிணை

(1) நாய் வந்தது — ஒன்றன்பால் வினைமுற்று
(2) நாய்கள் வந்தன — பலவின்பால் வினைமுற்று

மூவிடத்து வினைமுற்றுகள்

(1) நான் வந்தேன் —
தன்மை ஒருமை வினைமுற்று

நாங்கள் வந்தோம் —
தன்மை பன்மை வினைமுற்று

(2) நீ வந்தாய் —
முன்னிலை ஒருமை வினைமுற்று

நீங்கள் வந்தீர்கள் —
முன்னிலைப் பன்மை வினைமுற்று

(3) மேலே சொன்ன ஐம்பால் வினைமுற்றுகளும் } படர்க்கை வினைமுற்றுகள்

உடன்பாடு—எதிர்மறை வினைமுற்றுகள்

1. **வந்தான்**—உடன்பாட்டு வினைமுற்று
(Affirmative Verb)

வந்திலன் — எதிர்மறை வினைமுற்று
(Negative Verb)

	உடன்பாடு	எதிர்மறை
	கண்டான்	கண்டிலன் (காணவில்லை)
	செய்வான்	செய்யான்
(அது)	போகும்	போகாது
(அவை)	போகும்	போகா
	போவார்	போகார்

பயிற்சி

1. வினைச்சொல் என்பது யாது?

2. வினைமுற்று, வினையெச்சம், பெயர் எச்சம்—யாவை?

3. வா, போ, நட, இரு, படி :—இப் பகுதிகளை முதலாகவுடைய வினைமுற்று, வினையெச்ச, பெயரெச்சங்களைக் கூறு.

4. நடி, பாடு, விதை, கொடு.—இவற்றைப் பகுதிகளாகவுடைய முக்கால வினைமுற்றுகளைக் கட்டம் போட்டு எழுது :

எண்	இறந்தகால வினைமுற்று	நிகழ்கால வினைமுற்று	எதிர்கால வினைமுற்று
1	நடித்தான்	நடிக்கிறான்	நடிப்பான்
2			
3			
4			

5. 4-ஆம் கேள்வியில் உள்ள பகுதிகளைக்கொண்டு முக்கால வினையெச்சங்களை எழுதிக் காட்டு :

எண்	இறந்த கால வினை எச்சம்	நிகழ்கால வினை எச்சம்	எதிர்கால வினை எச்சம்
1	நடித்து	நடிக்க	நடிக்க
2			
3			
4			

குறிப்பு: பெரும்பாலும் நிகழ்கால வினையெச்சமே எதிர்கால வினையெச்சமாகவும் வரும்.

6. 4-ஆம் கேள்வியில் உள்ள பகுதிகளைக்கொண்டு முக்காலப் பெயர் எச்சங்களை எழுதிக் காட்டு:

எண்	இறந்த காலப் பெயர் எச்சம்	நிகழ் காலப் பெயர் எச்சம்	எதிர் காலப் பெயர் எச்சம்
1	நடித்த	நடிக்கின்ற	நடிக்கும்
2			
3			
4			

7. தன்வினை, பிறவினை — இவற்றை உதாரணத்தால் விளக்கு.

8. வா, தா, எழு, செய், நட—இவற்றைப் பிறவினை ஆக்கு.

9. உண்பி, தோற்று, கூட்டு, உருட்டு.—இவற்றைத் தன்வினை ஆக்கு.

10. படித்தான், வருவான், ஓடியது, குதித்தன, போவார்கள், சொல்வேன், பார்க்கிறாய், சொன்னீர்கள், கேட்டோம்.—இவை என்னென்ன வினைமுற்றுகள்?

11. 10-ஆம் கேள்வியில் உள்ள வினைமுற்றுகள் எவ்வெக் காலத்தன?

12. அவ்வினைமுற்றுகளை எதிர்மறை வினைமுற்றுகள் ஆக்கு.

13. வந்தேன், பார்த்திலேன், செய்தான், செய்திலர், கண்டது, கண்டிலது, படிப்பார், (அவை) ஓடா.—

இவை என்னென்ன வினைமுற்றுகள்? கட்டம் போட்டு எழுது:

எண்	உடன் பாடு	எதிர் மறை
1		
2		
3		
4		

14. வருகிறேன் படிக்கிருய் வாழ்த்துவார் நடக்கிறது சிரிக்கிருேம் பார்த்தீர்கள்

இவற்றைக் கோடிட்ட இடங்களில் தக்கவாறு அமைத்துப்படி :—

(1) நீங்கள்——. (2) நான்——.

(3) குழந்தை——. (4) நாங்கள்——.

(5) நீ——. (6) சாமியார்——.

15, 14-ஆம் கேள்வியில் வந்துள்ள வினைமுற்றுகள் (1) எவ்வெப்பால் வினைமுற்றுகள்? (2) எவ்வெவ் விடத்து வினை முற்றுகள்?

16, ஆண்டேன், தோண்டுவாய், கேட்பீர், செய்கிருர், இடித்தோம், எகின்றன—ஒவ்வொன்றுக்கும் உள்ள மற்ற இரண்டு கால வினைமுற்றுகளையும் எழுது,

III. வாக்கியம்

1. பரந்தாமன் பாடம் படித்தான், பரந்தாமன் படித்து, படித்த பரந்தாமன்—இவ்வாறு இரண்டும் இரண்டுக்கு மேற்பட்ட சொற்களும் தொடர்தல் சொல் தொடர் எனப்படும்.

2. ஆயினும், பரந்தாமன் பாடம் படித்தான்- என்பதே கருத்து முடிந்து நிற்கும் சொல் தொடர் அதனால் இது முற்றுச் சொற்றொடர் அல்லது வாக்கியம் (Sentence) எனப்படும்.

3. பரந்தாமன் படித்து, படித்த பரந்தாமன்- என்பன கருத்து முடியாமல் நிற்கும் சொற்றொடர் கள் ஆகும். ஆகவே, இவை எச்சச் சொற்றொடர்கள் எனப்படும்.

4. பயனிலை: ஒரு வாக்கியத்தில் உள்ள வினை முற்றே பயனிலை எனப்படும். பரந்தாமன் பாடம் படித்தான்.—இதில், படித்தான் என்பது பயனிலை.

5. எழுவாய்: வினையைச் செய்யும் கருத் தாவே எழுவாய் எனப்படுவது. இங்கு, படித்தவன் பரந்தாமன் ஆதலால், பரந்தாமன் என்னும் பெயர்ச் சொல் எழுவாய் ஆகும்.

6. செயப்படு பொருள்: பயனிலைக்கு முன் எதை என்பதை வைத்து, 'எதைப் படித்தான்?' என் னும் கேள்வியைக் கேட்டு வரும் பதிலே செயப்படு

பொருள் ஆகும். இங்கு, **பாடம்** என்பது **செயப்படு பொருள்.**

குறிப்பு :—(1) அவன் யார்?—இங்கு 'யார்?' என்னும் வினைச் சொல்லே பயனிலையாக வந்துள்ளது. ஆதலால், இது **வினைப் பயனிலை** எனப்படும்.

(2) இவன் நல்ல பையன்.—இங்குப் 'பையன்' என்னும் பெயர்ச்சொல்லே பயனிலையாக வந்துள்ளது. ஆதலால், இது **பெயர்ப் பயனிலை** எனப்படும்.

(3) எப்பொழுது வந்தாய்?—இந்த வாக்கியத்தில் 'நீ' என்னும் எழுவாய் தோன்றாமல் (மறைந்து) நிற்பதால், **தோன்றா எழுவாய்** எனப்படும்.

(4) செயப்படு பொருள் இரண்டாம் வேற்றுமையாகவே இருக்கும்.

எழுவாய் - பயனிலைகளின் பொருத்தம்

எழுவாயும் பயனிலையும் திணை, பால், எண், இடங்களில் ஒத்து இருக்கும். எழுவாய்க்கு **வேற்றுமை** உண்டு; பயனிலைக்குக் **காலம்** உண்டு. செயப்படு பொருள் எப்பொழுதும் பெயர்ச் சொல்லாகவே இருக்கும்.

1. **பரந்தாமன் பாடம் படித்தான்.**—இதில்,

பரந்தாமன்—பெயர்ச்சொல், உயர்திணை, ஆண்பால், ஒருமை எண், படர்க்கை இடம், முதல் வேற்றுமை.

படித்தான்—வினைச்சொல், உயர்திணை, ஆண் பால், ஒருமை எண், படர்க்கை இடம், இறந்த காலம்

2. தன்மை, முன்னிலைப் பெயர்களுக்குத் திணையும் பாலும் இல்லை. மற்றவை எல்லாம் உண்டு,

நான் பாடம் படித்தேன்.—இதில்,

நான்—பெயர்ச்சொல், ஒருமை எண், தன்மை இடம், முதல் வேற்றுமை.

படித்தேன்—வினைச்சொல், ஒருமை எண், தன்மை இடம், இறந்த காலம்.

சில வினைச்சொற்கள்

1. செயப்படுபொருள் குன்றா வினை : செயப்படு பொருளைப் பெற்று வரும் வினைச்சொல் செயப்படு பொருள் குன்றா வினை எனப்படும். நான் பாடம் படித்தேன்.—இதில், 'படித்தேன்' என்னும் வினைக்குப் 'பாடம்' என்பது செயப்படுபொருளாக வந்துள்ளது. ஆதலின், படித்தேன் என்பது செயப்படு பொருள் குன்றா வினை ஆகும்.

2. செயப்படுபொருள் குன்றிய வினை : செயப்படு பொருளைப் பெற்று வராத வினைச்சொல் செயப்படு பொருள் குன்றிய வினை எனப்படும்.

நான் வந்தேன்.—இதில், 'வந்தேன்' என்பது பயனிலை. இதற்கு முன் 'யாரை' அல்லது 'எதை' என்பதை வைத்து, 'யாரை வந்தேன்?' அல்லது 'எதை வந்தேன்?' என்று கேள்வி கேட்டால் பதில்

இல்லை. ஆதலால், **வந்தேன்** என்பது செயப்படு பொருள் குன்றிய வினையாகும்

3. **செய் வினை (Active Verb)**: நான் பாடம் **படித்தேன்**.—இதில், 'படித்தேன்' என்பது நானே செய்த வினையாகும். ஆகவே இது செயவினை எனப் படும்.

4. **செயப்பாட்டு வினை (Passive Verb)**: பாடம் என்னால் **படிக்கப்பட்டது**.—இதில், 'படிக்கப்பட்டது' என்பது என்னால் செய்யப்பட்ட வினை ஆகும். ஆகவே, இது செயப்பாட்டு வினை எனப்படும்.

குறிப்பு:—இதில், செய்வினை உள்ள வாக்கியத் தில் இருக்கும் (1) எழுவாய் மூன்றும் வேற்றுமை யில் வந்திருப்பதையும், (2) செயப்படு பொருள் எழுவாயாக வந்திருப்பதையும், (3) செய்வினை 'படு' அல்லது 'பட்டு' என்பதை ஏற்று (படிக்க+பட்டு) வந்திருப்பதையும் கவனிக்க வேண்டும்.

வாக்கிய வகை

1. புலி மானைக் **கொன்றது**.—இதில், கொன் றது என்பது பயனிலை; வேறு பயனிலை இல்லை. இப்படி ஒரே பயனிலை உடைய வாக்கியம் **தனி வாக் கியம்** எனப்படும்.

2. புலி மானைக் **கொன்றது**; **ஓடிவிட்டது**.— இதில், (1) புலி மானைக் கொன்றது, (2) புலி ஓடி விட்டது-என இரண்டு வாக்கியங்கள் இருக்கின்றன.

இவை ஒன்றுக்கு ஒன்று தொடர்பு இல்லாதவை, அஃதாவது தனித்தனிப் பயனிலை உடையவை. ஆதலால், இத்தொடர், **தொடர் வாக்கியம்** எனப்படும்.

3. புலி மானைக் கொன்றது.—இது உடன்பாட்டு (செயல் நடந்ததைக் குறிக்கும்) **வாக்கியம்**.

புலி மானைக்கொன்றிலது (கொல்லவில்லை).—இது **எதிர்மறை** (செயல் நடவாததைக் குறிக்கும்) **வாக்கியம்**.

4. புலி மானைக் கொன்றது.—இது **சாதாரண வாக்கியம்**.

5. புலி மானைக் கொன்றதா?—இது **கேள்வி வாக்கியம்**.

6. புலி மானைக் கொன்றிலதா? (கொல்லவில்லையா? } இது **எதிர்மறைக் கேள்வி** வாக்கியம்

சொல் இலக்கணம் கூறுதல்

(Parsing)

1. **கண்ணன் பசுக்களை மேய்த்தான்.**

கண்ணன்—பெயர்ச்சொல், உயர்திணை, ஆண்பால், ஒருமை எண், படர்க்கை இடம், முதல் வேற்றுமை, 'மேய்த்தான்' என்னும் பயனிலைக்கு **எழுவாய்**.

மேய்த்தான்—**வினைச்**சொல், செயப்படுபொருள் குன்றா **வினை**, உயர்திணை, **ஆண்**பால், ஒருமை எண்,

படர்க்கை இடம், இறந்த காலம், 'கண்ணன்' என்னும் எழுவாய்க்குப் பயனிலை.

பசுக்களை—பெயர்ச்சொல், அஃறிணை, பலவின் பால், பன்மை எண், படர்க்கை இடம், இரண்டாம் வேற்றுமை, 'மேய்த்தான்' என்னும் பயனிலைக்குச் செயப்படுபொருள்.

2. நான் வருகிறேன்.

நான்—பெயர்ச்சொல், ஒருமை எண், தன்மை இடம், முதல் வேற்றுமை, 'வருகிறேன்' என்னும் பயனிலைக்கு எழுவாய்.

வருகிறேன்—வினைச்சொல், செ. குன்றிய வினை ஒருமை எண், தன்மை இடம். நிகழ்காலம், 'நான்' என்னும் எழுவாய்க்குப் பயனிலை.

குறிப்பு:—தன்மை, முன்னிலைப் பெயர்களுக்குத் திணையும் பாலும் இல்லை; மற்றவை எல்லாம் உண்டு.

3. வ ்த மனிதன் வழுக்கி விழுந்தான்.

வந்த—பெயர் எச்சம், 'மனிதன்' என்னும் பெயர்ச் சொல்லைத் தழுவி நிற்கிறது.

மனிதன்—பெயர்ச்சொல், உயர்திணை, ஆண் பால், ஒருமை எண், படர்க்கை இடம், முதல் வேற்றுமை, 'விழுந்தான்' என்னும் பயனிலைக்கு எழுவாய்.

வழுக்கி—வினையெச்சம், 'விழுந்தான்' என்னும் பயனிலையைத் தழுவி நிற்கிறது.

விழுந்தான்—வினைச்சொல், உயர்திணை, ஆண் பால், ஒருமை எண், படர்க்கை இடம், இறந்த காலம், செ. குன்றிய வினை, 'மனிதன்' என்னும் எழுவாய்க்குப் **பயனிலை**.

நிறுத்தக் குறிகள்

, இது **காமா** (Comma). இது பெரும்பாலும் **வினையெச்சங்களை** அடுத்தும் சிறுபான்மை பிற இடங்களிலும் வரும்.

: இது **கோலன்** எனப்படும். 'இதனைக் கவனி', 'அது பின்வருமாறு' என்று வரும் இடங்களில் இதனை இடவேண்டும்.

; இது **செமிகோலன்** என்பது. ஒரு பெரிய வாக்கியத்தில் ஒரே எழுவாய் இருந்து, பல பயனிலைகள் வருமாயின், அப்பயனிலைகளை அடுத்து இதனை இட வேண்டும்.

. இது **முற்றுப் புள்ளி** (**Full Stop**) என்பது. இதனைச் சாதாரண வாக்கிய முடிவில் இடவேண்டும்.

? இது **கேள்விக்குறி**. இதனைக் கேள்வி வரும் இடங்களில் இட வேண்டும்.

! இது **வியப்புக்குறி**. இது வியப்பு, வருத்தம், இரக்கம் முதலியவற்றைக் குறிக்கும் இடங்களில் இடத் தக்கது.

" " இவை, நேர் நேராகப் பேசும் பேச்சைச் சொல்லும் பொழுதும் எழுதும் பொழுதும் இட வேண்டுபவை. முன்னதைத் தொடக்கத்திலும் பின்னதை முடிவிலும் இடவேண்டும்.

பாராவின் இலக்கணம்

(Paragraph)

ஒரே பொருள் பற்றிய பல வாக்கியங்களின் தொகுதியே பாரா எனப்படுவது. ஒரு பாடத்தில் ஐந்து பொருள்களைக் கூறவேண்டும் ஆனால், ஐந்து பாராக்களாகவே எழுதவேண்டும். உனது பாட புத்தகத்தில் உள்ள ஒவ்வொரு பாடத்திலும் இருக்கின்ற பாராக்களைக் கவனி. இவ்வுண்மை நன்ருக விளங்கும்.

பயிற்சி

1. சொற்றொடர் என்பது யாது?

2. முற்று—எச்சச் சொற்றொடர்கள் எவை? உதாரணம் கொடு.

3. எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்—இவற்றை எப்படி கண்டறிவது?

4. கண்ணன் கட்டுரை எழுதினன், வள்ளி தேனைக் குடிக்கிருள், வேடர் வில்லை வளைப்பர், நாய் வேட்டையை விரும்புகிறது, மான்கள் புல் மேய்கின்றன, நான் உன்

ளைப் பாரேன், நீ பாடம் படித்தாயா :—இவற்றில் உள்ள எ. ப. செ. கட்டம் போட்டு எழுது.

எண்	எழுவாய்	பயனிலை	செயப்படு பொருள்
1			
2			
3			
4			

5. எவை எவை பயனிலையாக வரும்? உதாரணம் கொடு.

6. கண்ணன் வந்தான், கண்ணன் எவன்? கண்ணன் ஒரு பையன்.—இவற்றில் டீள்ள பயனிலைகள் எவை?

7. கழுதை மேய்கிறது, நான் படிக்கிறேன், நீ எழுதுவாய், கந்தன் நீராடுகிறுன், வள்ளி பாடுகிருள்.—இந்த எழுவாய்—பயனிலைகளின் பொருத்தத்தை விளக்கு.

8. செய்வினை, செயப்பாட்டு வினை—யாவை ? உதாரணத்தால் விளக்கு.

9. செயப்படுபொருள் குன்றிய வினை—செ. குன்ரு வினை—இவற்றை உதாரணம் தந்து விளக்கு.

10. பூனை எலியைப் பிடித்தது, இராமன் வாலியைக் கொன்ருன், பசுக்கள் புல்லை மேய்கின்றன, குதிரை வண்டியை இழுக்கிறது, நான் சோறு சாப்பிடுவேன், நீ மோர் அருந்துவாய்.—இவை என்ன வினைகள் ? இவற்றைச் செயப்பாட்டு வினைகள் ஆக்கு.

11. மேற்சொன்ன வாக்கியங்களில் உள்ள செயப்படு பொருள் குன்ருவினைகளைக் கூறு.

12. கோமளம் கோலம் போட்டாள், மங்களம் அயர்ந்து தூங்கினுள், வள்ளி வளையலைக் கழற்றினுள், நான் காலையில் குளிப்பேன், நீ எழுந்து போகிருய்.—இவற்றில் உள்ள செ. குன்றிய வினைகள் எவை? செ. குன்ரு வினைகள் எவை?

13. தனி வாக்கியம் எப்படி வரும்? உதாரணம் கொடு.

14. தொடர் வாக்கியம் எப்படி வரும்? உதாரணம் தந்து விளக்கு.

15. நான் உண்டேன், கண்ணன் வருகிருன், கண்ணகி பாடுவாள், நாய்கள் ஓடும், நீ பார்ப்பாய்.—இவற்றை எதிர்மறை வினையுள்ள வாக்கியங்கள் ஆக்கு.

16. 15-ஆம் கேள்வியில் உள்ள வாக்கியங்களை விளு வாக்கியங்கள் ஆக்கு.

17. காமா, கோலன், செமிகோலன்—இவற்றை எங்கெங்கு இட வேண்டும்?

18. முற்றுப்புள்ளி, கேள்விக்குறி, வியப்புக்குறிகளை எங்கெங்கு இடவேண்டும்?

19. பாராவின் இலக்கணம் என்ன?

20. தக்க இடங்களில் தக்க குறிகளை இடு:—

(1) நான் பள்ளிக்குப் போய் வந்தேன்

(2) நீ பள்ளிக்குப் போனுயா

(3) நான் கோபாலனைப் பார்த்து நீ பள்ளிக்குப் போனுயா என்று கேட்டேன்

(4) அவன் கீழ் வருவனவற்றைச் சொன்னன்

(5) அடடா அவர் மகனு இவன்

IV. பொது

1. சந்தி விதிகள்

(1) இரண்டாம் வேற்றுமை உருபாகிய ஐ-க்கு முன் வரும் க, ச, த, ப மிகும்.

அவனை + காண் = அவனைக் காண்
அவனை + சேர் = அவனைச் சேர்
அவனை + தாங்கு = அவனைத் தாங்கு
அவனை + பார் = அவனைப் பார்

(2) நான்காம் வேற்றுமை உருபாகிய கு-வ்வுக்கு முன் க, ச, த, ப மிகும்.

அவளுக்கு + கொடு = அவளுக்குக் கொடு
அவளுக்கு + செலவு = அவளுக்குச் செலவு
அவளுக்கு + தா = அவளுக்குத் தா
அவளுக்கு + பங்கு = அவளுக்குப் பங்கு

(3) அந்த, இந்த, எந்த, அங்கு, இங்கு, எங்கு } இவற்றின் முன் க, ச, த, ப மிகும்.

அந்த + பையன் = அந்தப் பையன்
அங்கு + பார் = அங்குப் பார்

(4) ஆக, ஆகி, ஆய், போய், வித, மகை, எல்லா, பற்றி } இவற்றின் முன் க, ச, த, ப மிகும்.

நல்லவனுக	+ போனுன்	=நல்லவனுகப் போனுன்
போய்	+ சேர்	=போய்ச் சேர்
பலவித	+ பைகள்	=பலவிதப் பைகள்
பலவகை	+ பைகள்	=பலவகைப் பைகள்
எல்லா	+ பொருள்கள்	=எல்லாப் பொருள்கள்
அதைப்பற்றி	+ பேசு	=அதைப்பற்றிப் பேசு

2. பிழையும் திருத்தமும்

நாம் பேசும்பொழுது பல சொற்களைப் பிழை படப் பேசுகிறோம். பேச்சுப் பிழை எழுதும் பொழுதும் வந்து விடுகிறது. அப்பிழைகளை நீக்க வேண்டுமானுல், நாம் பிழையின்றிப் பேசவேண்டும்; பிழையின்றி எழுத வேண்டும்.

நாம் பேசும் பிழைபட்ட சொற்களும் அவற்றின் திருத்தங்களும் சில கீழே காண்க :—

பிழை	திருத்தம்
அடமானம்	அடைமானம்
அண்ணாக்கயறு	அரைஞாண்கயிறு
அமக்களம்	அமர்க்களம்
அருகாமை	அருகு
அனியாயம்	அநியாயம்
விநயகன்	விநாயகன்
ஆத்துக்கு	அகத்துக்கு
இடது	இடம் இடம் + கை = இடக்கை வலம் + கை = வலக்கை

பிழை	திருத்தம்
இமையமலை	இமயமலை
இஸ்துகுனு	இழுத்துக்கொண்டு
உத்திரவு	உத்தரவு
எண்ணை	எண்ணெய் (எள்+நெய்)
எலிமிச்சம்பழம்	எலுமிச்சம்பழம்
எழவு	இழவு
என்னமோ	என்னவோ
ஓண்டியாய்	ஒன்றியாய்
ஒத்தடம்	ஒற்றடம்
ஓரல்	உரல்
கடப்பாறை	கடப்பாரை
கிடாரங்காய்	கடாரங்காய்
கத்திரிக்கோல்	கத்தரிக்கோல்
கத்திரிக்காய்	கத்தரிக்காய்
கம்பிளி	கம்பளி
கருவப்பிலை	கருவேப்பிலை
கறடுமுறடு	கரடுமுரடு
காக்கா	காக்கை
காக்ஷி	காட்சி
குடக்கூலி	குடிக்கூலி
கெடியாரம்	கடிகாரம்
சீக்காய்	சிகைக்காய்
சுந்திரம்	சுந்தரம்
சுவற்றில்	சுவரில்
தலகாணி	தலைஅணை
தாப்பாள்	தாழ்ப்பாள்
தாவாரம்	தாழ்வாரம்
திராசு	தராசு
திருவாணி	திருகாணி
தீவாளி	தீபாவளி, தீபாவலி

பிழை	திருத்தம்
துடப்பம்	துடைப்பம்
தொந்திரவு	தொந்தரவு
நஞ்செய்	நன்செய்
புஞ்செய்	புன்செய்
பயிறு	பயறு
பாவக்காய்	பாகற்காய்
நேத்து	நேற்று
பசும்பால்	பசுப்பால்
புடவை	புடைவை
புட்டு	பிட்டு
புண்ணாக்கு	பிண்ணாக்கு
முழிக்கிறது	விழிக்கிறது
ரொம்ப	நிரம்ப
வடவம்	வடகம்
விசிரி	விசிறி
விரால்	வரால்
விரை	விதை
வெக்கம்	வெட்கம்
வெங்கலம்	வெண்கலம்
வெண்ணை	வெண்ணெய் (வெள் + நெய்)
வெய்யல்	வெய்யில்
வெளக்கு	விளக்கு
வென்னீர்	வெந்நீர் (வெம் + நீர்)
வேணும்	வேண்டும்
வேண்டாம்	வேண்டா
வேஷ்டி	வேட்டி

3. சொற்கள் சேரும் முறை

1.	கல்+பலகை	=	கற்பலகை
	பல்+பொடி	=	பற்பொடி
	திரு+அடி	=	திருவடி
	முரடு+மாடு	=	முரட்டு மாடு
	பூ+கொடி	=	பூங்கொடி
	பூ+சோலை	=	பூஞ்சோலை
	கண்+நீர்	=	கண்ணீர்
	செய்+நன்றி	=	செய்ந்நன்றி
	ஆறு+ஓரம்	=	ஆற்றோரம்
	கிணறு+நீர்	=	கிணற்று நீர்
2.	வெம்மை+நீர்	=	வெந்நீர்
	தண்மை+நீர்	=	தண்ணீர்
	இனிமை+சொல்	=	இன்சொல்
	வன்மை+சொல்	=	வன்சொல்
3.	விளா+காய்	=	விளாங்காய்
	மா+காய்	=	மாங்காய்
	புளி+காய்	=	புளியங்காய்
	தெங்கு+காய்	=	தேங்காய்
	வேம்பு+காய்	=	வேப்பங்காய்
	பனை+காய்	=	பனங்காய்
4.	வடக்கு+கிழக்கு	=	வடகிழக்கு
	வடக்கு+திசை	=	வடதிசை
	கிழக்கு+திசை	=	கீழ்த்திசை
	கிழக்கு+காற்று	=	கீழ்க்காற்று
	தெற்கு+கிழக்கு	=	தென்கிழக்கு
	தெற்கு+மேற்கு	=	தென்மேற்கு

5. ஒன்று + ஒன்று = ஒவ்வொன்று
இரண்டு + இரண்டு = ஈரிரண்டு
மூன்று + மூன்று = மும்மூன்று
நான்கு + நான்கு = நந்நான்கு
ஐந்து + ஐந்து = ஐயைந்து
ஆறு + ஆறு = அவ்வாறு
ஏழு + ஏழு = எவ்வேழு
எட்டு × எட்டு = எவ்வெட்டு
பத்து + பத்து = பத்துப்பத்து, பப்பத்து

4. நேர்-மாறுன சொற்கள்

அகம் × புறம்
அகலம் × குறுக்கம்
அடி × முடி
அர்த்தம் × அநர்த்தம்
அறம் × மறம்
ஆக்கல் × அழித்தல்
ஆதி × அந்தம்
ஆரம்பம் × முடிவு
இன்சொல் × வன்சொல்
இன்பம் × துன்பம்
இலாபம் × நஷ்டம்
இயற்கை × செயற்கை
இளமை × முதுமை
உண்டு × இல்லை
உபகாரம் × அபகாரம்
உயர்வு × தாழ்வு
உள் × வெளி
உறவு × பகை
எரிதல் × அவிதல்
ஏறல் × இறங்கல்
ஓங்கல் × ஒடுங்கல்
கட்டுதல் × அவிழ்த்தல்
கற்ருர் × கல்லார்
கனவு × நனவு
காலம் × அகாலம்
காலை × மாலை
குணம் × குற்றம்
குறைவு × நிறைவு
கூடுதல் × குறைதல்
கொடுக்கல் × வாங்கல்
கொடுமை × செம்மை
சுகம் × துக்கம்
சுருங்கல் × விரிதல்
செங்கோல் × கொடுங்கோல்
செல்வம் × வறுமை
செலவு × சிக்கனம்
சேர்தல் × பிரித்தல்
தூக்கம் × விழிப்பு
தூரம் × சமீபம்
தோல்வி × வெற்றி
தோற்றம் × மறைவு
நன்மை × தீமை

நல்வினை × தீவினை
நினைவு × மறதி
நீதி × அநீதி
நீளம் × குள்ளம்
பல × சில
பிறப்பு × இறப்பு
புதுமை × பழமை
புகழ்தல் × இகழ்தல்
புகழ்ச்சி × இகழ்ச்சி
புண்ணியம் × பாவம்
பெருக்கம் × சுருக்கம்
பெருமை × சிறுமை
போற்றுதல் × தூற்றுதல்
மறைதல் × வெளிப்படல்
முன் × பின்
முன்பு × பின்பு
முதல் × கடை
மூடுதல் × திறத்தல்
மென்மை × வன்மை
மேல் × கீழ்
மேன்மக்கள் × கீழ்மக்கள்
மேன்மை × கீழ்மை
மேடு × பள்ளம்
வரவு × செலவு
வளர்தல் × தேய்தல்
வாழ்வு × தாழ்வு
விருப்பு × வெறுப்பு
வெப்பம் × தட்பம்
வெந்நீர் × தண்ணீர்
வேற்றுமை × ஒற்றுமை

பயிற்சி

1. சேர்த்து எழுது:—அவரை + பார், அதற்கு + கொடு, அந்த + காக்கை, எங்கு + போனான், தீயவனைப் + போனான், பலவித + பைகள், எல்லா + பைகள், அதுபற்றி + கேள்.

பல் + பொடி, தன்மை + நீர், ஆறு + ஓரம், ஆறு + ஆறு, வயிறு + வலி, பூ + செடி, மா + காய், மா + பழம், வேம்பு + காய், வடக்கு + கிழக்கு, கிழக்கு + காற்று.

2. இப் பிழைகளை திருத்து :—அருகாமை, விநாயகன், இடது கை, எண்ணை, கருவப்பிலை, சீக்காய், நஞ்செய், புடவை, தீவாளி, ரொம்ப, வெண்ணை, வெய்யல், வேஷ்டி, வேணும்.

௩. பிரித்துக் காட்டு :—கற்பலகை, வெந்நீர், கிணற்று நீர், மும்மூன்று, முரட்டு மாடு, தேங்காய், பனங்காய், கீழ்த்திசை, வெவ்வேறு, கண்ணீர், பூஞ்சோலை, இன் சொல்.

4. எதிர்ச் சொற்களைக் கூறு :—அகம், ஆதி, இன்பம், உயர்வு, எரிதல், ஏறல், கனவு, காலை, சுகம், வரவு, தோல்வி, நீதி, பிறப்பு, பெருமை, போற்றுதல், முதல், மென்மை, மேடு, வெந்நீர், தாழ்வு, வேற்றுமை.

V. தேர்வு வினாக்கள்

1. தமிழ் எழுத்துகள் எப்படி 247 ஆகின்றன ?

2. உயிர், மெய், உயிர்மெய் — பெயர்க் காரணம் கூறு.

3. உயிர்மெய் எழுத்துகள் 216 ஆதல் எப்படி ?

4. ர-ற, ந-ன-ண, ல-ழ-ள : இவற்றை உச்சரித்துக் காட்டு.

5. இவற்றைச் சொற்களில் அமைத்து உச்சரித்துக் காட்டு.

6. பிழையுடைய எழுத்துகளைத் திருத்து—அரம்=தருமம், இறை = உணவு, உறவு = வலிமை, மரு = குற்றம், விரகு = கட்டை, மாறி = மழை, விரல் = வலிமை, வாலை = ஒருவகை மீன், வலி = காற்று, தனை = இலை, மணம் = வாசனை, திணை = ஒருவகைத் தானியம், பனி= வேலை.

7. அ, இ, உ—இவை உயிர் எழுத்துகள். இவற்றைச் சுட்டு எழுத்துகள் என்பது எப்படிப் பொருந்தும் ?

8. வினா எழுத்துகள் எவை? உதாரணம் தந்து விளக்கு.

9. அணில், அம்மி, உரல், ஊக்கம், பாழ், யானை, ஐயர், ஓடு, பட்டு.—இவற்றில் உள்ள (1) உயிர் எழுத்துகள் (2) மெய் எழுத்துகள் (3) உயிர் மெய் எழுத்துகள் இவற்றைக் குறி.

10. அணில், அவள், இடம், இவர், ஏணி, ஏது, உதை, உவர், அவனு, எலும்பு, எது.—இவற்றில் உள்ள (1) சுட்டு எழுத்துகள் எவை? (2) வினு எழுத்துகள் எவை?

11. சொல் என்பது யாது? பெயர்ச் சொல், வினைச் சொல்—எவை?

12. பெயர்ச் சொல், எத்தனை வகைப்படும்?

13. மரம், கோவில், தை, கிளை, தீமை, பொங்கல்.—இவை என்ன பெயர்கள்?

14. முருகன், வள்ளி, வேடர், மலை, ஆறுகள்.—இவை எவ்வப் பால் பெயர்கள்?

15. நாங்கள், நீ, நான், நீங்கள்.—இவை எவ்வெவ் விடத்துப் பெயர்கள்?

16. பெயர்ச்சொல்லில் அறிய வேண்டுவன யாவை?

17. திணை, பால், எண், இடம், வேற்றுமை—இவற்றை விளக்கு.

18. திணை, பால், எண், இடம்—இவற்றின் உட் பிரிவுகள் எவை?

19. உயர்திணைக்கு உரிய பால்கள் எவை? அஃறிணைக்கு உரிய பால்கள் எவை?

20. ஒருமை எண்ணிற்கு உரிய பால்கள் எவை? பன்மை எண்ணிற்கு உரிய பால்கள் எவை?

21. மூன்று இடங்களையும் உதாரணத்தால் விளக்கு.

22. திருவாளன், உழவன், வீரன், செல்வன், ஒருவன், சிறுவன், ஆசிரியன்—பெண்பால் கூறு.

23. பொன்னி, மனைவி, உபாத்தியாயினி, பிராட்டி, ஆசிரியை—இவற்றிற்கு ஆண்பால் கூறு.

24. பசு, ஒரு, தோழன், நான், புல், பூ, யாது, எனக்கு, நான்—இவற்றிற்குப் பன்மை எண் கூறு.

25. கண்ணன் தம்பிக்கு வேடனைக் காட்டி, "தம்பீ, இவனது படகில் ஏறித் தப்பினேன். இவனால் எனது உயிர் பிழைத்தது" என்றான்—இதில் உள்ள வேற்றுமை உருபுகளைச் சுட்டு. அவை என்னென்ன வேற்றுமை உருபுகள்?

இராமன், பிள்ளை, மக்கள் — இவை எட்டாம் வேற்றுமையில் எவ்வெவ்வாறு வருக?

27. 3, 5, 6, 7-ஆம் வேற்றுமை உருபுகளை அமைத்து உதாரணம் எழுது.

28. வினைச்சொல் யாது? அதன் வகை என்ன?

29. வந்த என்பது பெயரெச்சம்—எப்படி? வந்து என்பது வினையெச்சம்—எப்படி? வந்தது என்பது வினைமுற்று—எப்படி?

30. வந்தான், நின்றான், கூடினார், பேசினது ஓடின- இவற்றிற்கு உரிய முக்காலப் பெயரெச்சங்களைக் கட்டம் இட்டு எழுது.

31. இவற்றிற்குரிய முக்கால் வினையெச்சங்களையும் கட்டம் இட்டு எழுது.

32. வா, நட, போ, நில், சேர் — இப்பகுதிகளையுடைய (1) இறந்தகால ஆண்பால் வினைமுற்றுகளைக் கூறு. (2) நிகழ்காலப் பெண்பால் வினைமுற்றுகளைச் சொல். (3) எதிர்காலப் பலவின்பால் வினைமுற்றுகளைக் கூறு.

33. அதே பகுதிகளைக்கொண்ட (1) இறந்தகால வினை எச்சங்களையும் (2) இறந்தகாலப் பெயர் எச்சங்களையும் எழுது.

34. அதே பகுதிகளைக்கொண்ட (1) நிகழ்கால வினை எச்சங்களையும் (2) எதிர்காலப் பெயர் எச்சங்களையும் எழுது.

35. தன்வினை, பிறவினை—விளக்கி உதாரணம்கொடு.

36. (1) உண், வா, போ, ஆடு, படி—இவற்றைப் பிறவினை ஆக்கு (2) உருட்டு, அழைப்பி, பேசுவி, தாழ்த்து-இவற்றைத் தன்வினை ஆக்கு.

37. படிக்கிறார், வருவாள், போனன், வந்தது, ஓடுகின்றன—இவை என்ன வினைமுற்றுகள்? இவற்றின் காலம் என்ன?

38. படிக்கிறேன், வருவாய், போனேம், வந்தீர்கள்—இவை என்ன வினைமுற்றுகள்? இவை எவ்வெக் காலத்தவை?

39. உண்டான், செய்வாள், (அது) போகும், அவை போகும், போவார்—இவை என்ன வினைகள்? இவற்றை எதிர் எதிர்மற்ற வினைகள் ஆக்கு. இவ்வாறு கட்டம் இட்டு எழுது.

எண்	உடன்பாடு	எதிர்மறை
1		
2		
3		
4		
5		

40. கீழ்வரும் வினை முற்றுகளைப் பொருத்தமாக (கோடிட்ட) இடங்களில் அமைத்துக் கூறு :—

படிக்கிறேன்	கேட்கிருய்	ஓடும்
வருவான்	எழுந்தாள்	ஓடடா

(1) கமலம் காலையில்——.

(2) நான் பாடம்——.

(3) அது மெதுவாக——.

(4) அவை வேகமாக——.

(5) நீ கதை——.

(6) முருகன் நாளை——.

41. சொல் தொடர்—யாது? அஃது எத்தனை வகைப் படும்?

42. முருகன் புத்தகம் வாங்கினுன்.—இதில் உள்ள எ. ப. செ. கண்டறிவது எப்படி?

43. முருகன் படிக்கிருன், முருகன் யார்? முருகன் நல்ல பையன்.—இவற்றில் உள்ளவை எவ்வெப் பயனிலை கள்?

44. நான் வருகிறேன், எப்பொழுது வந்தாய்? அவர் யார்—இவற்றில் உள்ள எழுவாய்களைக் குறிப்பிடு.

45. நான் பாடம் படிக்கிறேன், நீ பாட்டுப் பாடி ஞய், கந்தன் துணி தைப்பான்.—இவற்றில் உள்ள எழு வாய் பயனிலைகளின் பொருத்தம் கூறு.

46. நான் வந்தேன், அவள் எழுகிருள், அவர் நடக் கிருர், அது என்னைப் பார்க்கிறது, ஆடுகள் தழை தின் கின்றன—இவற்றில் உள்ள (1) செய்யப்படுபொருள் குன்றிய வினைகள் எவை? (2) செ. குன்ரு வினைகள் எவை?

47. 45-ம் கேள்வியில் உள்ள செயவினைகளைச் செயப்பாட்டு வினைகள் ஆக்கு.

48. செயவினை உள்ள வாக்கியம் செயப்பாட்டு வினையில் அடையும் மாறுதல் என்ன?

49. தனி வாக்கியம், தொடர் வாக்கியம், கேள்வி வாக்கியம், எதிர்மறை வாக்கியம், எதிர்மறைக் கேள்வி வாக்கியம்—இவற்றுக்கு உதாரணங்கள் கொடு.

50. 'நிறுத்தக் குறிகள்' எவை? 'பாரா' என்பது யாது?

51. நேர்க்கோடு இட்ட இடங்களில் தக்க குறிகளை இடு :—

(1) தகப்பனார் | | மகனே | நான் நாளை சென்னை செல்வேன் என்றார் |

(2) அவன் உன் மாமன் மகனா |

(3) அடடா | என்ன அநியாயம் |

(4) அக்கதை பின் வருமாறு |

(5) நான் கடைக்குப் போனேன் | புத்தகம் வாங்கினேன் |

52. சேரத்து எழுது :—சுப்பனை + பார், யானைக்கு + கொடு, அங்கு + சந்தி, அந்த + தோழி, போய் + பார், பல வித + பைகள், எல்லா + பொருள்கள், அது பற்றி + கேள்.

53. பிரித்து எழுது :—கற்பலகை, திருவடி, வெந்நீர், வடதிசை, புளியங்காய், பூச்செடி, அவ்வாறு, ஆற்றோரம் கண்ணீர், இன்சொல், தேங்காய்.

சேர்த்து எழுது :—எட்டு + எட்டு, தன்மை + நீர், தெற்கு + மேற்கு, புளி + பழம், முரடு+மாடு,வயிறு + வலி, செய் + நன்றி, பல் + பொடி.

55. பிழைகளைத் திருத்து :—அனியாயம், அண்ணாக் கயறு, உத்திரவு, ஓரல், புஞ்செய், திருவாணி, நேத்து, ரொம்ப, துடப்பம், சுவற்றில், தாப்பாள், பயிறு, பாவக் காய், வேஷ்டி.

56. எதிர்ச் சொற்களைக் கூறு :—முன், வரவு, நிறைவு வறுமை, மறதி, அபகாரம், இளமை, இயற்கை, புதுமை, நஷ்டம், சுகம் ஆதி, பெருமை, வன்மை.

——

கட்டுரை

I. கடிதங்கள்

1. அழைப்புக் கடிதம்

10, தங்கசாலை வீதி,
சென்னை,
15—8—'42.

அன்புள்ள முருகா,

நாளை என் அம்மான் (தாய் மாமன்) கொழும்பில் இருந்து சென்னை வருவார். அவர் அங்கு ஆசிரியராக இருக்கிறார். நாம் அவரிடம் இலங்கையைப் பற்றிய பல செய்திகளைக் கேட்டு அறியலாம். கொழும்பு, கண்டி, அநுராதபுரம், போல நருவா முதலிய புகழ் பெற்ற நகரங்களைப் பற்றிய பல விவரங்களைக் கேட்டு உணரலாம். நீ, நாளை மறு நாள் மாலை 4 மணிக்கு என் வீட்டிற்கு வா. நான் உன்னை அவருக்கு அறிமுகப் படுத்துவேன்.

இங்ஙனம் :
உன் அன்புள்ள நண்பன்
க. நக்கீரன்.

திரு. க. முருகன்,
5, இராமநாதன் தெரு,
சூளை, சென்னை

2. வாழ்த்துக் கடிதம்

5, முருக மேஸ்திரி வீதி,
தஞ்சாவூர்,
10—5—'42.

அன்புள்ள கண்ணகி,

நீ நான்காம் வகுப்புத் தேர்வில் தேறினதைக் கேட்டு மிக்க மகிழ்ச்சி அடைந்தேன். நீ மேன் மேலும் மிகுந்த ஊக்கம் கொண்டு படிக்கவேண்டும். உனக்கு ஒவ்வொரு முயற்சியிலும் வெற்றி உண்டாகக் கடவுளை வேண்டுகிறேன். எனது மகிழ்ச்சியை உன் பெற்றோர்க்குத் தெரிவி.

இங்ஙனம் :
உன் அன்புள்ள நண்பி,
இ. சொக்கம்மாள்

திரு. சு. கண்ணகி,
5-ஆம் வகுப்பு மாணவி,
முனிசிபல் பெண் பாடசாலை,
தஞ்சாவூர்.

---

3. ஆறுதல் கடிதம்

15, கம்பர் தெரு,
மயிலாப்பூர், சென்னை,
21—9—'42.

அன்புள்ள கோகிலா,

உன் தம்பி குலசேகரன் திடீரென இறந்த செய்தி கேட்டுத் திடுக்கிட்டேன். மூன்று வயதுச் சிறுவனான அவன் உங்கள் வீட்டிற்கே ஒரு விளக்க

மாக இருந்தான். அவன் ஒருவனே ஆண் பிள்ளை ஆதலால், உன் பெற்றோர் அவனைத் தம் உயிர் போல மதித்து வந்தனர். நீயும் அவனைக் கண்மணி போலக் கருதினாய். என் செய்வது! 'எல்லாம் கடவுள் செயல்' என்பதைப் பற்றி நீ படித்திருக்கிறாய் அல்லவா? உனக்கு நான் அதிகம் கூற வேண்டுவதில்லை. நீ மன ஆறுதல் பெற்று நன்றாகப் படி. வரும் தசரா விடுமுறையில் எங்கள் வீட்டிற்கு வந்துவிடு.

இங்ஙனம்:
உன் அன்புள்ள சிநேகிதி,
பு. சுந்தரி.

திரு. கோகிலம்,
5-ஆம் வகுப்பு மாணவி,
ஜில்லா போர்டு பாடசாலை,
சோளவந்தான்,
மதுரை ஜில்லா.

---

4. இடச்சிறப்பை விளக்கும் கடிதம்

15, மேட்டுத் தெரு,
செஞ்சி, தென் ஆற்காடு,
15—11—'42.

அன்புள்ள கண்ணா,

நலம். உன் நலத்தை அறிவி. நான் உன்னைச் செஞ்சிக்கு வரும்படி பலமுறை அழைத்திருக்கிறேன் அல்லவா? நீ இந்தக் கிறிஸ்மஸ் விடுமுறையில் தவறாமல் வருவாயாக. இந்த இடம் பார்க்கத்

தகுந்தது; சரித்திரப் புகழ் பெற்றது. இது ஜெய சிங்கு மன்னன் ஆண்ட ஊர். இங்கு இரண்டு மலைகள் இருக்கின்றன. ஒன்று இராஜகிரி எனப்படும். மற்றொன்று கிருஷ்ணகிரி எனப்படும். இரண்டன் மீதும் பல கோட்டை, கொத்தளங்கள், கோவில்கள், மண்டபங்கள், சுனைகள், நெற்களஞ்சியங்கள் முதலி யன இருக்கின்றன. இரண்டு மலைகளுக்கும் செல்ல ஒழுங்கான பாதை இருக்கிறது. மலைமீது மதிற் சுவர் எழுப்பப்பட்டு இருக்கிறது. மலைகளைச் சுற்றி லும் அழகான அகழி பாழ் அடைந்த நிலையில் இருக்கின்றது. பெரிய மலையான கிருஷ்ணகிரியின் அடிவாரத்தில் அழகான—ஆனால் இப்போது பாழ டைந்துள்ள கோவில் ஒன்றும் வேறு பல கட்டிடங் களும் இருக்கின்றன. இவை எல்லாம் ஜெயசிங்கு மன்னன் காலத்தில் நல்ல நிலையில் இருந்தவை. நாம் இவற்றைப் பார்ப்பதால், மலைகள்மீது கட்டிடம் கட்டும் முறை, சரித்திரச் சிறப்பு, நம் முன்னோர் திறமை முதலிய பல குறிப்புகளை அறியலாம் அல்லவா? ஆதலால், நீ வரும் விடுமுறையில் இங்கு வருவாயாக.

இங்ஙனம்,
உன் அன்புள்ள நண்பன்,
கு. ஆறுமுகன்.

திரு மு. கண்ணன,
ஆரம்ப பாடசாலை,
அச்சிறுபாக்கம் போஸ்ட்,
செங்கற்பட்டு ஜில்லா.

5. என் ஒரு நாள் வேலைகள்

10, பிராட்வே,
சென்னை,
15—7—'42.

அன்புள்ள அப்பா அவர்களுக்கு வணக்கம்.

தங்கள் அன்புள்ள கடிதம் வந்தது. நான் இங்குச் சுகமாகவே இருக்கிறேன். இங்கு மாமன், மாமி சுகமாக இருக்கிறார்கள். அங்குள்ள எல்லோர் நலத்தையும் அறிய விரும்புகிறேன். என் ஒரு நாளைய வேலைகளைத் தெரிவிக்கும்படி எழுதி இருக்கிறீர்கள்.

நான் காலை 6 மணிக்கு எழுந்து நீராடுவேன்; பிறகு என் பாடங்களைப் படிப்பேன்; அவ்வேலைக்குப் பிறகு வீட்டுக் கணக்குப் போடல், காப்பி எழுதுதல் முதலிய வேலைகளைச் செய்வேன்; 9-மணிக்கு உணவு உண்டு, பள்ளிக்கூடம் போவேன்.

10 மணிக்கு எனது பள்ளிக்கூட வேலை தொடங்குகிறது. பகல் ஒரு மணி வரை நான்கு வித வகுப்புகள் நடைபெறும். மறுபடி மாலை இரண்டு மணி முதல் 4-15 வரை மூன்றுவித வகுப்புகள் நடைபெறும்.

4-15-க்குப் பிறகு நான் பள்ளிக்கூட மைதானம் செல்வேன்; அங்கு ஓடுதல், தாண்டுதல் முதலிய பலவகை விளையாட்டுகளில் பொழுதைப் போக்குவேன்; மாலை 5 மணிக்கு வீடு திரும்புவேன்.

நான் 6-30 முதல் 8 மணி வரை பாடங்களைப் படிப்பேன்; பிறகு உணவு உண்டு, மாமாவுடன் சிறிது தூரம் நடந்து வருவேன். இரவு 9-30 மணிக்குப் படுக்கைக்குப் போவேன். என் அன்புள்ள அப்பா, இவையே என் ஒரு நாளைய வேலைகள். தங்கள் பதிலை ஆவலுடன் எதிர்நோக்கும்,

தங்கள் அன்புள்ள உரிய மகன்,
க. இளங்கோ.

திரு. அ. கதிர்வேல் முதலியார் அவர்கள்,
மளிகை வியாபாரம்,
செம்பாக்கம் போஸ்ட்,
செங்கற்பட்டு ஜில்லா.

---

6. இலவசப் படிப்புக்கு மநு எழுதுதல்

10, பவளக்காரத் தெரு,
ஜார்ஜ் டவுன், சென்னை,
5—7—'42.

முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப் பள்ளித்
தலைமை ஆசிரியர் அவர்களுக்கு,

ஐயா,

நான் தங்கள் பள்ளிக்கூடத்தில் ஐந்தாம் வகுப்பு 'இ' பிரிவில் படித்து வருகிறேன். என் தகப்பனார் திடீரென்று சென்ற வாரம் காலமானார். என் தாயார் கூலி வேலை செய்பவர். மாதச் சம்பளம் கொடுத்து என்னைப் படிக்க விடுபவர் எவரும் இல்லை. நான் வகுப்பில் முதல் மாணவனாக இருக்

கிறேன்; சென்ற வகுப்பிலும் முதல்வனாகவே இருந்தேன். என் நிலைமையை நன்றாய்க் கவனித்து இலவசமாகப் படிக்க உரிமை தரும்படி தங்களை வணக்கத்துடன் வேண்டுகிறேன்.

இங்ஙனம்:
தங்கள் பணிவுள்ள மாணவன்,
சி. ராஜராஜன்.

---

7. துண்டு விளம்பரம்

அன்புடையீர்,

நாளை (15—9—42) மாலை 5 மணிக்குச் செம்பாக்கம் கிராமம் நால்வர் மடத்தில் ஒரு பொதுக் கூட்டம் கூடும். நமது கிராமக் கூட்டுப் பஞ்சாயத்துத் தலைவர் திருவாளர் பழநிப் பத்தர் கூட்டத்திற்குத் தலைமை வகிப்பார். அப்போது வித்வான் சு. கண்ணப்ப முதலியார், 'கிராம முன்னேற்றம்' என்பது பற்றிப் பேசுவார். எல்லோரும் வருக.

இங்ஙனம்,
மா. வடிவேல் முதலியார்.

8. மாணவர் தமிழ்ச் சங்க ஆண்டு விழா அழைப்பு

அன்புடையீர்,

சென்னை, வண்ணாரப்பேட்டைப் பாக்கியம்மாள் பாடசாலைத் தமிழ் மாணவர் சங்க ஆண்டு விழா

இம்மாதம் 30-ஆந் தேதி சனிக்கிழமை மாலை 4 மணிக்குத் திரு வி. கலியாணசுந்தர முதலியார் தலைமையில் கொண்டாடப்பெறும். அப்பொழுது வித்வான் ச. கு. கணபதி ஐயர், B. O. L., 'மாணவரும் தமிழும்' என்பது பற்றிப் பேசுவார். தாங்கள் அன்புடன் வந்து விழாவைச் சிறப்பிக்க வேண்டுகிறோம்.

இங்ஙனம் :
க. நக்கீரன்.
(சங்கச் செயலாளன்)

க. சுந்தரம் ஐயர்,
சங்கத் தலைவர்.
(தலைமை ஆசிரியர்)

---

9. போலீசாருக்குக் கடிதம்

(சைக்கிள் களவு)

15, கடைத்தெரு,
திருப்போரூர்,
செங்கற்பட்டு ஜில்லா,
20—7—'42.

திருப்போரூர் போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் அவர்களுக்கு.

ஐயா,

நான் இன்று மாலை கடைத் தெருவில் உள்ள சுப்பையர் சிற்றுண்டிச்சாலை வாசலில் சைக்கிளை வைத்து உள்ளே சென்றேன். சிற்றுண்டி சாப்பிட்டு வந்தபோது சைக்கிள் இல்லை. பக்கத்தில் விசாரித்தும் பயன் இல்லை.

எனது சைக்கிள் பி.எஸ்.ஏ. சைக்கிள். அதன் எண் ஒ. 380. நமது யூனியன் உரிமைச் சீட்டின் (லைசென்ஸ்) எண் 250. ஒரு விளக்கும், காற்று அடிக்கும் கருவியும் அதில் இணைக்கப்பட்டு இருந்தன.

புலன் விசாரித்து எனது சைக்கிளைப் பெற்றுத் தருமாறு தங்களைப் பணிவுடன் வேண்டுகிறேன்.

இங்ஙனம் :
தங்கள் உண்மையுள்ள,
கோ. ஆலாலசுந்தரன்.

---

10. நகர சபைக்கு விண்ணப்பம்

15, வள்ளுவர் தெரு,
கீழவாசல், தஞ்சாவூர்,
10—8—'42.

நகரசபைச் சுகாதார அதிகாரி அவர்களுக்கு,
நகரசபை நிலையம், தஞ்சாவூர்.

ஐயா,

கீழவாசல் வள்ளுவர் தெருவில் படிப்பில்லாத மக்கள் பலர் வசிக்கின்றனர். அவர்கள் தெருவைப் பல வகையிலும் அசுத்தப் படுத்துகிறார்கள். அவர்களைத் தடுப்பார் இல்லை. அந்தத் தெருவில் நாங்கள் சுத்தமாக இருக்கமுடியவில்லை; தெருவில் நடக்கக் கால் கூசுகிறது. சுகாதாரக் குறைவே

மிகுதியாக இருக்கிறது. தங்கள் கீழ் உள்ள மேற்பார்வையாளர் இதில் போதுமான கவனம் காட்டவில்லை. ஆதலால், தாங்களே ஒரு முறை வந்து, இத்தெருவைப் பார்வையிட்டு, ஆவன செய்யப் பணிவுடன் வேண்டுகிறேன்.

இங்ஙனம்:
தங்கள் பணிவுள்ள,
சு. கமலநாதன்.

பயிற்சி

1. உன் வீட்டில் நடைபெறும் நவராத்திரி விழாவிற்கு வரும்படி உன் நண்பனுக்கு ஒரு கடிதம் எழுது.

2. உன் தம்பி காணமற் போனதை அறிவித்துப் போலீசுக்கு ஒரு கடிதம் எழுது.

3. உன் ஒரு நாளைய வேலைகளைக் குறிப்பிட்டு உன் நண்பனுக்கு ஒரு கடிதம் எழுது.

4. உன் தெருவின் சுகாதார நிலையைக் குறிப்பிட்டு நகரசபைச் சுகாதார அதிகாரிக்கு ஒரு கடிதம் எழுது.

5. உன் நண்பன் போட்டி விளையாட்டுகளில் வெற்றி பெற்றதைப் பாராட்டி ஒரு கடிதம் எழுது.

6. உன் நண்பனுக்கு உன் ஊரைச் சிறப்பித்து ஒரு கடிதம் எழுது.

7. உன் நண்பன் தாயார் இறந்தது குறித்து ஆறுதல் கடிதம் ஒன்றை எழுது.

8. இலவசப் படிப்புக்காக மநு ஒன்று எழுது.

9. உனது தமிழ்ச் சங்கக் கூட்டம் ஒன்றைப் பற்றித் துண்டு விளம்பரம் ஒன்றை எழுது.

10. உனது தமிழ்ச் சங்க ஆண்டு விழா அழைப்பு ஒன்றை எழுது.

II. கட்டுரை

1. பசு

குறிப்புகள் :—1. பசுவின் உடல் அமைப்பு
2. அதன் உணவு
3. அதன் பயன்

கட்டுரை

பசுவின் உடல் அமைப்பு

1. பசு சாதுவான மிருகம். அதன் தலைமீது இரண்டு கொம்புகள் உண்டு. அதன் கழுத்துப் பருத்து இருக்கும். அதன் மார்பு அகன்று ஆழமாக இருக்கும். அதன் கால்கள் குட்டையானவை. குளம்புகள் பிளவு பட்டவை. அதன் வால் நீண்டு நுனியில் மயிர் உடையதாக இருக்கும்.

அதன் உணவு

2. பசு புல்லையும் வைக்கோலையும் தின்னும்; பிண்ணாக்கு, பருத்திக்கொட்டை இவற்றையும் தின்னும்; கழுநீரைக் குடிக்கும். பசு வயிறாரப் புல் மேய்ந்த பிறகு, ஓர் இடத்தில் தங்கி அசைபோடும்.

அதன் பயன்

3. பசு பால் தரும் விலங்கு. அப் பால் நம்மை வளர்ப்பது. நாம் அதனைக் காய்ச்சித் தயிர்

ஆக்கி உட்கொள்ளுகிறோம். தயிரைக் கடைந்தால் மோரும் வெண்ணெயும் உண்டாகின்றன. நாம் அவற்றையும் உட்கொள்ளுகிறோம். வெண்ணெயைக் காய்ச்ச, நெய் ஆகும். இவை யாவும் உடம்பை வளர்ப்பவை ஆகும். பசுவின் நீர், சாணம் ஆகிய இரண்டும் விஷப் பூச்சிகளை அழிக்க வல்லவை. ஆதலால் பலர் வீடுகளைச் சுத்தம் செய்ய அவற்றைப் பயன்படுத்துவர். பசுவின் சாணம் பயிருக்கு நல்ல எருவாகும்; அடுப்பு எரிக்க எருமுட்டை ஆகும்.

இறந்த பசுவின் தோல், செருப்பு முதலியவை செய்யப் பயன்படுகிறது. அதன் கொம்புகள் பொத்தான்கள், சீப்புகள், பொடி டப்பிகள், சிமிழ்கள் முதலியன செய்ய உதவுகின்றன. அதன் குளம்புகள் வச்சிரம் செய்ய உதவுகின்றன. அதன் எலும்புத் தூள் வயலுக்கு நல்ல எரு ஆகிறது.

---

2. வாழை மரம்

குறிப்புகள் :—1. வாழை மரம்

2. வாழையின் வகை

3. வாழையின் பயன்

கட்டுரை

வாழை மரம்

1. வாழை மிக்க பயன் தரும் மரம். இது பெரும்பாலும் பலர் வீடுகளில் பயிராவது. இது

விதை போட்டு முளைப்பதில்லை. இதன் அடியில் தோன்றும் கன்றுகளைப் பெயர்த்து நட்டால், அவை குறுத்து விட்டு வளரும். வாழைமரம் கிளை கள் இல்லாதது. வாழை இலைகள் நீண்டு அகன்று இருக்கும். மரத்தின் அடிப்பாகம் பட்டைகளை உடையது. அவற்றில் எப்பொழுதும் தண்ணீர் இருக்கும். பட்டை, தண்டு, இலை, பூ, காய் என்பனவே இதன் உறுப்புகள். இதன் காய்கள் சீப்புச் சீப்பாக இருக்கும். பல சீப்புகளை உடைய குலை தாறு எனப்படும். அதன் நுனியில் வாழைப் பூ நீண்டு தொங்கும்.

வாழையின் வகை

2. வாழையில் பல வகை உண்டு. அவை பூவன், மொந்தன், ரஸ்தாளி, பேயன், பச்சை வாழை, செவ்வாழை, தேன் வாழை, நெய் வாழை, நமரன், மலை வாழை எனப் பல வகைப்படும், இவற்றுள் மலை வாழையே சிறந்தது. இப் பழ வகைகள் மதுரை ஜில்லாவில் மிகுதியாகப் பயிராகின்றன.

வாழையின் பயன்

3. வாழை இலை உண்கலமாக உதவும். காய்ந்த இலை தொன்னையாக உதவும். வாழைப் பட்டைகளைத் தைத்து உண்கலம் ஆக்கலாம் காய்ந்த பட்டைகள் பொடி மட்டைகளாக உதவும். வாழை நார் பூத்தொடுக்க உதவும். பூ, காய், தண்டு இவை கறி சமைக்க உதவும். வாழைப் பழம் சாப்

பிட உதவும். வாழைப்பழம் இல்லாத விருந்தும் நற்காரியமும் இல்லை அல்லவா? மா-பலா-வாழை என்னும் முக்கனிகளில் வாழை ஒன்று. இதிலிருந்து வாழையின் சிறப்பை நன்கு உணரலாம்.

---

3. காகம்

குறிப்புகள் :—1. உடல் அமைப்பு
2. உணவு
3. குணச் சிறப்பு

கட்டுரை

உடல் அமைப்பு

1. காகம் கருமை நிறம் உடையது. கரிய நிறம் உடையவனைக் 'காக்கா!' என்று வேடிக்கையாகக் கூறுவது நம்மவர் வழக்கம். காகம் நன்றாய்ப் பறக்கத் தக்கபடி அதற்கு இறகுகள் அமைந்துள்ளன. அதன் கால்கள் குட்டையானவை; மூக்கு நீண்டு உறுதியாக இருக்கும். காகத்திற்குக் கண் மணி ஒன்றே உண்டு, அதனால்தான் அது பொருளை உற்று நோக்கும்பொழுது, ஒரு புறம் சாய்ந்து பார்க்கும்.

உணவு

2. காகம் இறந்த எலி முதலியவற்றைக் கொத்தித் தின்னும்; அழுகிய பண்டங்களைத் தின்னும். அதனால் தெருவில் நாற்றம் இராது. அத

ஞல் இதனைத் 'தோட்டி' என்று சிலர் கூறுவர். இது சோறு, பழம் முதலியவற்றையும் தின்னும்.

குணச் சிறப்பு

3. காகம் உறவினரை ஆதரிக்கும் இயல்பு உடையது. ஒரு காகம் ஓர் இடத்தில் தனக்குரிய உணவைக் கண்டதும், 'கா-கா' என்று கூவும். உடனே பல காக்கைகள் அவ்விடத்திற்கு வந்து விடும். பிறகு அவை அனைத்தும் அவ்வுணவைப் பங்கிட்டுக் கொள்ளும். காகம் தினந்தோறும் குளிக்கும் நல்ல பழக்கம் உடையது. ஒரு காகம் காயம் பட்டு நகர முடியாமல் இருந்தால், மற்றவை ஒன்று கூடி, அதனைத் தூக்கிச் செல்லும். ஒன்று இறந்து விட்டால், மற்றவை கூடித் துக்கம் தெரிவிக்கும். காகம் இத்தகைய நல்ல குணங்களை உடைய பறவை.

---

4. எங்கள் கிராமம்

குறிப்புகள் :—1. கிராம அமைப்பு
2. கிராமக் குடிகள்
3. கிராமத் தொழில்கள்

கட்டுரை

கிராம அமைப்பு

1. எங்கள் கிராமம் திருவெண்ணெய் நல்லூர் என்பது. இது சைவ சமய ஆசாரியருள் ஒருவரான

சுந்தரமூர்த்தி நாயனர் சிறப்புப் பெற்ற இடம்; ஆதலால், இது சிறந்த சிவக்ஷேத்திரம் ஆகும். இது ஓர் அழகான கிராமம். இதில் ஏறக்குறைய இரு பது தெருக்கள் இருக்கின்றன. இரண்டு பெரிய குளங்கள் இருக்கின்றன. கிராம நிலங்கள் ஏரிப் பாய்ச்சலைக் கொண்டவை. கிராமத்தில் மா, வாழை, தென்னை மரங்கள் சிறப்பாகப் பயிராகின்றன. ஓர் ஆரம்ப பாடசாலை இருக்கின்றது.

கிராமக் குடிகள்

2. கிராமத்தில் வேளாளர் சிலர்; பிராமணர் சிலர்; படையாட்சி வகுப்பார் சிலர்; தச்சர், கொல் லர் முதலிய சில்லறைத் தொழில் செய்பவர் சிலர், இந்த வகுப்பார் எல்லோரும்ஏறக்குறைய ஒற்றுமை உடையவர்களாக இருக்கிறார்கள். இவர்கள் தங்கள் பிள்ளைகளை ஒழுங்காகப் பள்ளிக்கு அனுப்பிக் கல்வியில் கவனம் செலுத்துகிறார்கள். பிள்ளைகள் ஒழிந்த சமயங்களில் தோட்ட வேலையிலும் பயிர் வேலையிலும் கவனம் செலுத்துகிறார்கள்.

கிராமத் தொழில்கள்

3. திருவெண்ணெய் நல்லூரில் பயிர் வேலையே சிறந்த தொழில் ஆகும். வேளாளரும் பிராமண ரும் படையாட்சிமாரும் தாமாகவே பயிர் செய்கின் றனர். சிலர் குத்தகைக்கு விட்டு விடுகின்றனர். தச்சன், வண்ணான், நாவிதன், குயவன் முதலி யோர்க்கும் நிலங்கள் உண்டு. அவர்கள் பயிர்வேலை,

தங்கள் சொந்த வேலை ஆகிய இரண்டையும் கவனிக்கிறார்கள். பொதுவாக இவர்கள் எல்லோரும் கடவுள் பக்தி உடையவர்கள்.

---

5. எங்கள் பள்ளிக்கூடத் தோட்டம்
கட்டுரை

குறிப்புகள் :—1. தோட்டம்
2. நாங்கள் செய்த வேலை
3. நாங்கள் பயிர் செய்தவை
4. இன்றுள்ள நிலைமை

தோட்டம்

1. எங்கள் பள்ளிக்கூடத் தோட்டம் மிகப் பெரியது. அதன் நீளம் 300 அடி; அகலம் 100 அடி. அதைச் சுற்றிலும் இரும்பு வேலி போடப்பட்டு இருக்கிறது. தோட்டத்தின் நடுவில் பெரிய கிணறு ஒன்று இருக்கிறது. அதன் குறுக்களவு 20 அடி. கிணற்றில் நான்கு உருளைகள் உண்டு. ஒரே சமயம் நான்கு பேர் தண்ணீர் இறைக்கலாம். கிணற்றைச் சுற்றிலும் சிமெண்ட் போட்ட மேடை இருக்கிறது. அதிலிருந்து தோட்டத்தின் நான்கு பக்கங்களிலும் போகத் தக்க நீண்ட கால்கள் இருக்கின்றன.

நாங்கள் செய்த வேலை

2. எங்கள் பள்ளிக்கூட ஆசிரியர் ஐவர். அவர்கள் தோட்ட வேலையில் சிறந்தவர்கள். நாங்

கள் அவர்கள் செய்து காட்டியபடி நிலத்தை மண் வெட்டியால் கொத்தினோம்; கல் ஓடு முதலியவற்றை அப்புறப்படுத்தினோம்; மண்ணைப் பதப்படுத்தினோம்; பிறகு சாம்பல், மக்கிய மாட்டுச்சாணி, குதிரைச் சாணி, பிண்ணாக்கு வகைகள் இவற்றைப் புழுதி யோடு கலக்கினோம். பின்னர் எங்கள் ஆசிரியர்கள் சொற்படி தென்னம்பிள்ளை வைப்பதற்கு உரிய பெரிய சதுரங்கள் அமைத்தோம்; வாழைக்கன்று வைக்கப் பாத்திகள் தயாரித்தோம்; அவரை, பீர்க்கு, புடலை முதலியவற்றை நடக் குழிகளை அமைத்தோம்; கத்தரி, வெண்டை, பாகல் முதலிய விதைகளை விதைக்கத் தக்க நீண்ட பாத்திகளைப் பண்படுத்தினோம்; வேறு ஒரு பக்கம் கீரைப் பாத்தி களை அமைத்தோம்.

நாங்கள் பயிர் செய்தவை

3. இந்த வேலை முடிந்த பிறகு நாங்கள் ஆசிரியர் கட்டளைப்படி வேலி ஓரமாகத் தென்னம் பிள்ளைகளையும் வாழைக் கன்றுகளையும் நட்டு, நீரை விட்டோம். பிறகு நாங்கள் மற்ற விதைகளை ஆசிரி யர் சொற்படி அவர்கள் குறிப்பிட்ட இடங்களில் விதைத்துச் சிறிது நீரைப் பாய்ச்சினோம். சில நாட் களில் எல்லா விதைகளில் இருந்தும் முளைகள் கிளம்பின. நாங்கள் அவற்றைப் பார்த்து மகிழ்ந் தோம்; அன்று முதல் எல்லாப் பயிர்களையும் கவ னித்து வருகிறோம்; குறித்த நாட்களில் தவறாமல் நீரைப் பாய்ச்சிக் களை எடுத்து வருகிறோம்.

இன்றுள்ள நிலைமை

4. இவ் வேலைகள் முடிந்து நான்கு மாதங்கள் ஆகின்றன. எங்கள் தோட்டம் பச்சைப்பசேர் என்று இருக்கிறது. எங்கள் வேலை பலன் தருவதைக் காணக் காண எங்கள் மனம் பூரிக்கிறது.

---

6. தெரு நிகழ்ச்சி

குறிப்புகள் :—1. நடந்த நிகழ்ச்சி
2. அதற்குக் காரணம்
3. நான் கற்ற பாடம்

கட்டுரை

நடந்த நிகழ்ச்சி

1. நான் சென்ற கிறிஸ்மஸ் விடுமுறையில் செம்பாக்கம் என்னும் கிராமத்திற்குப் போய் என் மாமன் வீட்டில் தங்கி இருந்தேன். அந்த வீட்டின் முன் கீற்றுப் பந்தல் இருந்தது. ஒரு நாள் அப் பந்தலில் என் மாமன் உட்கார்ந்துபடித்துக்கொண்டு இருந்தார். அப்பொழுது அடுத்த ஊரான் ஒருவன் அங்குவந்து நின்றான்; 'பீடிக்கு நெருப்பு வேண்டும்' என்றான். உடனே என் மாமனுக்குக் கோபம் பொங்கியது; எழுந்தார்; அவன் கன்னத்தில் ஓங்கி அறைந்தார்; 'மடையா, இது யார் வீடு என்று நினைத்தாய்? குடி வெறியில் ஒன்றும் புரியவில்லை போலும்!' என்று வைதார். அவன் நன்றாகக்

குடித்து இருந்ததால், மரியாதை தவறிப் பேசி ஞன். பிறகு இருவரும் கை கலந்தனர்; தெருவில் உருண்டனர். பிறகு சிலர் வந்து விலக்கி அமைதியை உண்டாக்கினர். சிலர் அக் குடியனைத் தள்ளிக்கொண்டு போய் ஊருக்கு வெளியே விட்டு வந்தனர்.

அதற்குக் காரணம்

2. என் மாமன் கோபம் இல்லாமல் இருந்தால், சண்டை நடந்து இராது. அவர், 'இது நெருப்புத் தரத் தக்க இடம் இல்லை' என்று அமைதியாகப் பதில் சொல்லி இருக்கலாம். அவன் குடி வெறியில் இருந்ததால், தன் நிலைமை அறியாது நடந்துகொண்டான். என் மாமன் கொண்ட கோபமே இக் கேவலச் சண்டைக்குக் காரணம் ஆகும்.

நான் கற்ற பாடம்

3. குடிக்கும் பழக்கம் கொடியது. அது மனிதனை மிருகம் ஆக்கும்; சண்டை சச்சரவுகளில் இழுத்துவிடும். கோபம் பாவங்களுக்கு எல்லாம் அடிப்படை. அதுவும் மனிதனைக் கேவல நிலைக்குக் கொண்டு செல்லும். ஆதலால், கோபமும் குடியும் மனிதனுக்கு ஆகா.

7. நான் கண்ட திருவிழா

(காஞ்சிபுரம் - கருட சேவை)

குறிப்புகள் :—1. காஞ்சிபுரம்
2. பெருமாள் கோவில்
3. கருட சேவை

கட்டுரை

காஞ்சிபுரம்

1. காஞ்சிபுரம் மிகப் பழைய நகரங்களில் ஒன்று. அது கரிகாற் சோழனால் அமைக்கப்பட்டது. அது முதலில் சோழர் ஆட்சியிலும் பிறகு பல்லவர் ஆட்சியிலும் இருந்தது; அதன் பிறகு சோழர் ஆட்சிக்கு மாறிவிட்டது. இது சரித்திரம் கூறும் உண்மை. காஞ்சி சிறந்த சைவ-வைணவ க்ஷேத்திரம் ஆகும். அங்குப் பல்லவ அரசர்கள் கற்பாறைகளைக் கொண்டு மிகப் பெரிய கோவில்களைக் கட்டி இருக்கிறார்கள். அங்குப் பல தீர்த்தங்கள் இருக்கின்றன. 'பழைய காலத்தில் காஞ்சி நகரம் மிகப் பெரிய பட்டணமாக இருந்தது; பல மதத்தாரும் இருந்து அறிவு பெறும் நிலைக்களமாக இருந்தது' என்று பழைய தமிழ் நூல்கள் சொல்லுகின்றனவாம்.

பெருமாள் கோவில்

2. சிறிய காஞ்சிபுரத்தில் உள்ள வரதராஜப் பெருமாள் கோவில் புகழ் பெற்றது. அது பரமேஸ்

வர வர்மன் என்னும் பல்லவ அரசனால் கட்டப்பட்டது. அதனால் அதற்குப் 'பரமேஸ்வர விண்ணகரம்' என்னும் பெயர் உண்டு. அந்தக் கோவிலில் ஆண்டுதோறும் வைகாசி மாதத்தில் திருவிழா நடைபெறும்.

கருட சேவை

3. பெருமாள் கருட வாகனத்தின்மீது உலா வருதலே கருட சேவை எனப் பெயர் பெறும். அதைக் காண ஆயிரக்கணக்கான மக்கள் சென்னை முதலிய நகரங்களில் இருந்தும் சுற்றுபுறக் கிராமங்களில் இருந்தும் வருவார்கள். நான் அன்று என் சிறிய தகப்பனாருடன் கருட சேவை பார்க்கச் சென்றேன். எங்கும் மக்கள் கூட்டம். வெளியூர்களில் இருந்து ஏராளமான கடைகள் வந்திருந்தன. தெருவில் இரு பக்க வீட்டுத் திண்ணைகளிலும் மேல் மாடிகளிலும் ஜனக் கூட்டமே காணப்பட்டது. நாங்கள் கூட்டத்திற்குள் நுழைந்து பலவாறு இடிபட்டு முடிவில் சுவாமி தரிசனம் செய்தோம். நான் அன்று பட்ட அனுபவத்திலிருந்து 'நாம் இனித் திருவிழாக் கூட்டங்களில் நுழையலாகாது; தூர இருந்தே சுவாமி தரிசனம் செய்யவேண்டும்' என்று முடிவு செய்தேன்.

8. ஆறு

குறிப்புகள் :—1. ஆற்றின் தோற்றம்
2. உபநதிகளும் கிளை நதிகளும்
3. ஆற்றின் பயன்

கட்டுரை

ஆற்றின் தோற்றம்

1. ஆறு பெரும்பாலும் மலையிலிருந்தே தோற்றம் ஆகின்றது. நீராவி மேகமாகி மலையால் தடுக்கப்படுவதால், மழையின் பெரும்பாகம் மலை நாட்டிலேயே பெய்வது வழக்கம். இப்படி மலைமீது விழும் மழை நீர் பல அருவிகளாகக் கீழே இறங்கும்; பிறகு அவை ஒன்று சேர்ந்து ஆருகப் பெருகி ஓடும். இந்தியாவில் உள்ள பெரிய நதிகள் எல்லாம் இவ்வாறு மலைகளையே தம் பிறப்பிடங்களாகக் கொண்டுள்ளன. நமது தமிழ் நாட்டில் காவிரி, வையை, தாமிரபரணி, தென் பண்ணை, கொள்ளிடம் என்பன பெரிய ஆறுகள் ஆகும்.

உப நதிகளும் கிளை நதிகளும்

2. ஓர் ஆற்றில் தானுக வந்து சேரும் ஆறு உப நதி எனப்படும்; ஓர் ஆற்றிலிருந்து பிரிந்து செல்லும் ஆறு கிளை நதி எனப்படும். வெண்ணாறு, வெட்டாறு, குடமுருட்டி ஆறு முதலியன காவிரியின் கிளை நதிகள் ஆகும்.

ஆற்றின் பயன்

3. ஆற்றுப் பாய்ச்சல் நிலங்களுக்கு உயர்வைத் தரும். ஆற்றிலிருந்து பல கால்வாய்களை வெட்டி, ஆற்று நீரைப் பல இடங்களுக்கும் கொண்டு சென்று, நிலத்திற்குப் பாய்ச்சலாம்; ஏரிகளில் தேக்கலாம். வீணுகக் கடலில் கலக்கும் ஆற்று நீரைத் தக்க இடத்தில் தேக்கி, அணையைக் கட்டி, வேண்டும்போது கால்வாய்கள் மூலம் நெடுந் தூரத்தில் உள்ள வயல்களுக்குப் பாய்ச்சலாம். பெரிய ஆறுகளில் படகுகளைச் செலுத்தி அயல் நகரங்களுடன் வியாபாரம் செய்யலாம்; பிரயாணமும் செய்யலாம். அணைக்கட்டில் தேக்கும் தண்ணீரின் வேகத்திலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்யலாம். நமது நாட்டில் உள்ள அணைக்கட்டுகளில் **மேட்டூர் அணைக்கட்டு** பெரியது. ஆற்றுப் பாய்ச்சல் உள்ள நல்ல வயல்களில் நெல், கோதுமை, புகையிலை, கரும்பு முதலியன நன்ருகப் பயிர் ஆகும். ஆற்றின் பயன் அளவிட்டு உரைக்க முடியாது. அதனல் தான் ஔவையாரும், 'ஆறு இல்லா ஊருக்கு அழகு பாழ்' என்ருர்.

9. நாங்கள் பார்த்த பாடசாலை

(வாலாஜாபாத் இந்துமத பாடசாலை)

குறிப்புகள் :—1. வாலாஜாபாத் இந்துமத பாடசாலை
2. அதன் சிறப்பு
3. நாங்கள் அறிந்தவை

கட்டுரை

வாலாஜாபாத் இந்துமத பாடசாலை

1. வாலாஜாபாத் என்பது செங்கற்பட்டுக்கும் காஞ்சிபுரத்திற்கும் இடையில் உள்ள சிற்றூர். அது பாலாற்றங் கரையில் அமைந்துள்ள பழமையான ஊர். அங்குத் திரு. பஞ்சாக்ஷர முதலியார், திரு. மாசிலாமணி முதலியார் என்னும் இரு சகோதரர்களால் ஒரு பள்ளிக்கூடம் தோற்றம் ஆனது. அது சுமார் பதினைந்து ஆண்டுகளுக்குள் நமது தமிழ்நாட்டிலேயே சிறந்த ஒரு பாடசாலையாகப் பெயர் பெற்றுவிட்டது. அதைச் சென்று காணுத அறிஞர் இல்லை; கண்டு தம் பாராட்டைத் தெரிவியாத தலைவர்கள் இல்லை.

அதன் சிறப்பு

2. அதனை ஏற்படுத்திய சகோதரர்கள் அதன் வளர்ச்சிக்காகத் தங்கள் உடல்-பொருள்-ஆவி மூன்றையும் அர்ப்பணம் செய்கிறார்கள்; இரவும் பகலும் அதன் முன்னேற்றத்திற்காகப் பாடுபடுகிறார்கள்; பலர் பொருள் உதவியை நாடுகிறார்கள். இப்பொழுது அப்பள்ளியில் எட்டு வகுப்புகள் இருக்

கின்றன. சுமார் 700 பிள்ளைகள் கல்வி கற்கிறார்கள். அங்குத் தையல், பின்னல், கன்னார வேலை, மரச்சாமான் வேலை, மருத்துவம், பாய் பின்னல் முதலிய பலவகைத் தொழில்கள் திறம்படக் கற்பிக்கப்படுகின்றன. உடற்பயிற்சி தோட்ட வேலை முதலியவற்றிலும் மாணவர் சிறந்த பயிற்சி பெறுகின்றனர்; தமிழில் திறம்படப் பேசவும் எழுதவும் ஆற்றல் பெற்றுள்ளனர். அங்கு வாசித்த மாணவர் சிலர் சிறந்த தமிழ் வித்வான்களாக இருக்கின்றனர். மாணவர்க்கு உணவும் தங்கும் இடமும் தரப்பட்டுள்ளன.

நாங்கள் அறிந்தவை

3. நாங்கள் பள்ளிக்கூடத்தின் பல கட்டிடங்களைப் பார்த்தோம்; தொழிற் கூடங்களைக் கண்டோம்; பிள்ளைகள் செய்திருந்த பொருள்களைப் பார்வையிட்டோம்; அவர்கள் ஒன்றுகூடி உண்பதைக் கண்டோம். அவர்களிடம் மரியாதை, அடக்கம் முதலிய உயர் குணங்கள் குடி இருக்கக் கண்டோம். எங்கள் ஆசிரியர்களும் அவர்களைப் பார்த்து வியந்தார்கள். பள்ளிக்கூட ஆசிரியர்கள் அனைவரும் ஒரு மனத்தவராய் உழைப்பது பாராட்டத் தக்கது. சுருங்கக் கூறின், அப்பாடசாலையைப் போலப் பல பாடசாலைகள் ஏற்படின், நமது தமிழ் நாட்டுச் சிறுவர் எல்லா நன்மைகளையும் பெறுவர் என்பதில் ஐயம் இல்லை' என்று எங்கள் தலைமை ஆசிரியர் கூறினர்.

10. பொங்கல் பண்டகை

குறிப்புகள் :—1. பொங்கல் வரலாறு
2. பண்டகை நாட்கள்
3. கொண்டாட்டம்

கட்டுரை

பொங்கல் வரலாறு

1. நாம் கொண்டாடும் பண்டகைகளில் சிறந்தது **பொங்கலே** ஆகும். அது தை மாதப் பிறப்பன்று வருவது. மார்கழி மாதம் அடைமழை பெய்யும். அதனால் அதனைப் 'பீடை மாதம்' என்பர். மேலும், தை மாதம் நெற்பயிர் அறுவடை ஆகும் நல்ல மாதம். இவற்றுடன் சூரியன் புதிய நிலைக்கு வரும் நாளும் தை மாதம் முதல் தேதிதான். இத்தகைய காரணங்களைக் கொண்டே நம் முன்னோர் தை மாதம் முதல்நாள் புது நெல் குற்றிப் பொங்கல் சமைப்பார்கள்.

பண்டகை நாட்கள்

2. பொங்கல் பண்டகை நான்கு நாட்கள் கொண்டாடப்படும். முதல் நாள் **போகிப்** பண்டகை; இரண்டாம் நாள் **பொங்கள்** பண்டகை; மூன்றும்நாள் **மாட்டுப் பொங்கல்**; நான்காம் நாள் **காணும் பொங்கல்.**

கொண்டாட்டம்

3. போகியன்று வீட்டில் உள்ள பழைய மட்பாண்டங்களையும் பிற சாதாரணப் பொருள்களையும்

கழிப்பார்கள். அந்த நாளில் மழைக்குத் தலைவனை இந்திரனை எண்ணிப் பூசை இடுவார்கள். அடுத்த நாள், பயிருக்கு வெளிச்சத்தையும் சூட்டையும் தந்த சூரியனுக்கு நன்றி செலுத்தத் திறந்த வெளியில் பொங்கல் சமைத்துப் படையல் இட்டுப் பூசை செய்வார்கள். வயலை உழுது பயிரிடப் பக்குவம் செய்த கால் நடைகளுக்கு நன்றி செலுத்தும் நாளே மாட்டுப் பொங்கல் நாள். அன்று அவற்றைக் குளிப்பாட்டி அலங்கரித்துப் பொங்கல் சமைத்து, அவற்றுக்குப் படையல் இட்டு வழிபடுவார்கள். நான்காம் நாள் செல்வரைத் தொழிலாளர் சென்று காணும் நாள்; கண்டு, தங்கள் சேவைக்கு ஏற்ற நெல், பணம், ஆடை முதலியவற்றைப் பெறும் நன்னாள் ஆகும்.

---

11. நான் பார்த்த ஊர்

(திருப்போரூர்)

குறிப்புகள் :—1. திருப்போரூர்
2. இதன் பழைமை
3. இதன் சிறப்பு

கட்டுரை

திருப்போரூர்

1. **திருப்போரூர்** செங்கற்பட்டிற்குக் கிழக்கே 16 கல் தொலைவில் உள்ளது. இது சிறந்த சிவ

க்ஷேத்திரம் ஆகும். இதற்குச் சென்னையில் இருந்தும் செங்கற்பட்டில் இருந்தும் பஸ் போக்கு வரவு உண்டு. ஊரில் நடுநாயகமாக முருகர் கோவில் அமைந்துள்ளது. அதன் பக்கத்தில் அழகிய-ஆழமான திருக்குளம் இருக்கின்றது. சிறிய கடைத் தெரு இருக்கிறது. செட்டிமார் முதலியோர் கட்டிய சத்திரங்கள் பல இருக்கின்றன. இங்குத் தபால், போலீஸ், பத்திரப் பதிவு நிலையங்கள் இருக்கின்றன. இங்கே வசிப்பவருள் பலர் ஏழை மக்கள். கோவில் மேற்பார்வையைக் கவனிக்க மடாதிபதி ஒருவர் இருக்கிறார். கோவிலுக்குப் பின்புறம் சிறிய குன்றின்மீது ஒரு கோவில் இருக்கிறது. வேம்படி விநாயகர் கோவில் என்று ஒன்று இருக்கிறது. அது மிக்க சிறப்புடைய கோவில் ஆகும்.

இதன் பழமை

2. வேம்படி விநாயகர் கோவிலிலும் முருகர் கோவிலிலும் சில கல் வெட்டுகள் இருக்கின்றன. அவற்றில், (1) திருப்போரூர் சுமார் 70ப ஆண்டுகளுக்கு முன்பே பல்லவ அரசர் காலத்தில் சிறப்புற்று இருந்தது; (2) பிற்காலச் சோழ மன்னர்கள் முருகப்பெருமான் கோவிலை வளம்படுத்தினர்; பல கிராமங்களை மானியமாக விட்டனர் என்னும் செய்திகள் பொறிக்கப்பட்டு இருக்கின்றன. அப் பழைய காலத்துக் கோவில் பிற்காலத்தில் அழிந்து விட்டது.

இதன் சிறப்பு

3. ஏறக்குறைய 300 ஆண்டுகளுக்கு முன் இருந்த சிதம்பர சுவாமிகள் பழைய முருகப்பெருமான் இருந்த இடத்தைச் சுத்தம் செய்து கோவில் கட்டினர்; குளம் வெட்டினர்; திருப்போரூர் முருகன்மீது பல பாடல்களைப் பாடினர். அவருக்குப் பின்வந்த மடாதிபதிகள் படிப்படியாகக் கோவிலைச் சீர்திருத்திப் பெரிதாகக் கட்டிவிட்டார்கள்; பூசைகளும் விழாக்களும் சிறப்பாக நடக்கவேண்டிய சொத்துகளையும் சேர்த்தார்கள். இப்பொழுதுள்ள சிதம்பர சண்முக சுவாமிகள் கோவில் காரியங்களைத் திறமையாக நடத்தி வருகிறார்கள். இக் கோவிலில் விழாக் காலங்களிலும் மாதந்தோறும் வரும் கிருத்திகை அன்றும் ஏராளமான மக்களைக் காணலாம். சென்னையில் இருந்து மாதந்தோறும் திருப்போரூர் வரும் பக்தர்கள் பலர் ஆவர்.

---

12. எங்கள் தமிழ்ச் சங்கம்

குறிப்புகள் :—1. தமிழ்ச் சங்கம்
2. நாங்கள் செய்த வேலை
3. வேலையின் பயன்

கட்டுரை

தமிழ்ச் சங்கம்

1. எங்கள் பள்ளிக்கூடம் ஐந்தாம் வகுப்பு வரையில் உள்ளது. அதில் படிக்கும் மாணவர்

150 பேர். நான்கு, ஐந்தாம் வகுப்பு மாணவர் தொகை ஐம்பது. இந்த மாணவர் நன்மைக்கே தமிழ்ச் சங்கம் ஏற்படுத்தப்பட்டது. மற்ற வகுப்பு மாணவர் சிறுவர்; மேலும் பேசத் தெரியாதவர்கள்.

நாங்கள் செய்த வேலே

2. எங்கள் தலைமை ஆசிரியரே சங்கத்தை உண்டாக்கினர். அது இந்த ஆண்டு ஜூலை மாதம் முதல் தேதியில் துவக்கப்பட்டது. ஐந்தாம் வகுப்பு மாணவன் நக்கீரனே சங்கக் காரியதரிசியாகப் பிள்ளைகளால் தேர்ந்தெடுக்கப்பட்டான். அவன் வாரம் ஒரு முறை மாலை 4-30 மணிக்குக் கூட்டம் கூட்டுவான். அன்று மாணவர் பலர் பல பொருள் குறித்துப் பேசுவர். கூட்டத்திற்கு ஆசிரியர் ஒருவர் தலைமை வகிப்பார். அவர் நாங்கள் பேசியவற்றில் உள்ள குறைகளைத் திருத்துவார். இப்படி இந்த ஆண்டில் இருபது கூட்டங்கள் நடைபெற்றன.

வேலையின் பயன்

3. சங்கம் ஏற்படுவதற்கு முன், எங்களுக்குப் பலர் முன் ஒழுங்காகப் பேசத் தெரியாது. ஆனல், அப்பொழுது நாங்கள் நன்ருகப் பேசுகிறோம். கூச்சம் ஒழிந்தது. மாணவரைப் பார்க்கப் பார்க்க ஊக்கமும் உணர்ச்சியும் உண்டாகின்றன. நாங்கள் பல விஷயங்களை வேறு புத்தகங்களில் இருந்தும் ஆசிரியர்களைக் கேட்டும் தெரிந்துகொள்கிறோம்; பத்திரிகைகளைப் படித்துப் பல வேறு செய்திகளை

அறிகிறோம். இவற்றை எல்லாம் பல தலைப்புகளில் அடக்கிக் கூட்டங்களில் பேசிப் பழகுகின்றோம். சுருங்கக்கூறின், மாணவர் தமிழ்ச் சங்கம் இல்லாத பாடசாலை கோவில் இல்லாத ஊர் என்னலாம்.

Approved by the Text Book Committee, Madras for class use. Vide Supplement to Part I-B of Fort St., George Gazette dated 27—4—1943.